# ரமணோதயம்



ஜூலை 2016
காலாண்டு

அருணை விஜய இதழ்
விலை ₹ 20



பசு லக்ஷ்மி விமுக்தி தினம் (17-6-2016)



Pranams from

# SRIPAD STEELS PVT. LTD.,

## Chennai

உதயம் 15 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 4

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

அருணை விஜய இதழ்

ஜூலை 2016

ஆசிரியர்: Dr. S. ராம் மோஹன்

- கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
- கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.
- மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

ஆண்டு சந்தா: ₹ 75 தனி பிரதி: ₹ 20
ஆயுள் சந்தா: ₹ 1500

காசோலை/மணியார்டர் 'ரமணோதயம்' என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:
குமார் ராஜா: 9444261296
மின்னஞ்சல்: arunamramanam@gmail.com
மேலாளர் கண்ணன்: 9940418375

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:
குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்
41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை 4
தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

அருணை விஜய இதழ், ஜூலை 2016


| வ.எண் | பொருள் | | ப.எண் |
|---|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | | 3 |
| 2 | கனவில் வந்த தலைவன் | நொச்சூர் வேங்கடராமன் | 16 |
| 3 | விதைக்குள் மரம், நீரில் உப்பு, அம்புவில் ஆலி | சேலம் சேதுகுமாரன் | 17 |
| 4 | இனிவரும் திருநாட்கள் | | 21 |
| 5 | நெஞ்சையள்ளும் குருவாசகக்கோவை | பாவண்ணன் | 22 |
| 6 | பகவான் பகர்ந்த தாலாட்டு கீதம் | கௌதமன் | 37 |
| 7 | நான் யார் தெரியுமாவிலிருந்து நான் யார் வரை | டாக்டர் ஏ.வி. ராஜகோபாலன் | 43 |
| 8 | ரமணாயனம் | க்ரேஸி மோகன் | 52 |
| 9 | தணல் மலையின் தண் சுனை | ரா. கணபதி | 57 |
| 10 | சன்மார்க்கம் ஓர் அறிமுகம் | சு. பரமேஸ்வரன், கோவை | 62 |
| 11 | செவியின்பம் - பரபக்தி | வஸந்தா ராகவன் | 71 |
| 12 | செய்திகள் | | 77 |


# ஆசிரியர் உரை

## அடைக்கலம் ஆகும் அவன் பதம்

*19ஆம் நூற்றாண்டின் இறுதியில் நிகழ்ந்த அற்புத நிகழ்ச்சி இது. அப்போது கல்கத்தாவில் வாழ்ந்திருந்த மாமேதை கேஸவ சந்திரசேனர் ஸ்ரீராமகிருஷ்ணரைக் காணச் சென்றார். கேஸவ சந்திரசேனர் மெத்தப் படித்தவர். வாதம் செய்வதில் மிக வல்லவர். அவர் கடவுள் நம்பிக்கை இல்லாது இருந்தார். அவர் அப்போது ஞானியும், பக்தரும் ஆன ஸ்ரீராமகிருஷ்ணரைப் பற்றி அறிந்து, அவரிடம் சென்று, "கடவுள் இல்லை" என்று வாதிட்டு வெல்லலாம் என்று எண்ணினார்.*

*ஸ்ரீராமகிருஷ்ணரோ கல்வி அறிவே அற்றவர். சாஸ்திரங்களைப் படித்துக் கரைகண்டவர் அல்லர். ஆயின் அவர் தனது ஆத்ம ஹ்ருதயத்திலேயே நிரந்தரமாக வாழும் மஹாத்மா. கேஸவ சந்திரசேனர் ஸ்ரீராமகிருஷ்ணருடன் வாது செய்ய விரும்புகிறார் என்று கேட்டவுடன் குரு மஹராஜின் சீடர்கள் மகாமேதையான கேஸவ சந்திரசேனர் ஸ்ரீராமகிருஷ்ணரை வாதில் நிச்சயம் வென்று விடுவார் என எண்ணினர். ராமகிருஷ்ணர் சிரித்துக்கொண்டே, "அதனால் என்ன! அவர் என்னுடன் வாதிட வரட்டுமே! நான் அவரை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டு இருக்கிறேன்" என்றார்.*

*வாதிடும் நாளும் வந்தது. கேஸவ சந்திரசேனர் மிகுந்த தன்முனைப்புடனும் கர்வத்துடனும் வந்தார். "இந்தக் கல்வி அறிவற்ற பூசாரியை நிச்சயம் எளிதில் வெற்றி கொள்வேன்" என்று கருதினார். அங்கே*


ஸ்ரீராமகிருஷ்ணர்

அவரது மாணவர்களும், சக பேராசிரியர்களும், விற்பன்னர் களும் குழுமி இருந்தனர்.

கேஸவ சந்திரசேனர் துவங்கினார்: கடவுள் இருக்கிறாரா? நான் அதை நம்பவில்லை.

ஸ்ரீராமகிருஷ்ணர் "நீங்கள் எதை விரும்புகிறீர்களோ அதையே சொல்லிக் கொள்ளலாம்" என்றார்.

கேஸவ சந்திரர் கடவுள் ஏன் இல்லை என்பதற்கு ஏராளமான தர்க்கவாதங்களை எடுத்து அடுக்க ஆரம்பித்தார். ஆனால் ஸ்ரீராமகிருஷ்ணரோ அதற்கு மறுப்பேதும் சொல்லாமல், தனக்கு வாதிட விஷயமே இல்லாததுபோல் "நீங்கள் சொல்வது மிகவும் சரியாக இருக்கிறது" என்று சொல்லிக்கொண்டு இருந்தார். ஒரு வாதத்திற்கு நாம் எதிர்வாதம் செய்தால்தான் அவரை வெற்றிகொள்ள முடியும். இங்கோ எதிர்வாதமே இல்லை. கேஸவ சந்திரரின் வாதங்கள் பயனற்றுப் போயின. கேஸவ சந்திரர் நினைத்தார். "இவர் முட்டாளாக இருக்கவேண்டும். நான் என்ன வாதிடுகிறேன் என்பதை இவரால் புரிந்துகொள்ள முடியவில்லை போலும்." அவர் கேட்டார்: "ராமகிருஷ்ணரே! நான் கடவுள் இல்லை என்று சொல்கிறேன். ஏன் நீங்கள் நான் சொல்வதை எல்லாம் மறுக்காமல் சிரித்துக்கொண்டே இருக்கிறீர்கள்?"

ஸ்ரீராமகிருஷ்ணர் சொன்னார்: "உங்களைப் பார்ப்பதற்கு முன்புவரை நான் கடவுள் இருக்கிறார் என்பதை நம்பி வந்தாலும், எனது நம்பிக்கை அவ்வளவு தீவிரமாக இல்லை. ஆனால் உங்களைப் பார்த்தவுடன் கடவுள் இருக்கிறார் என்பதை முழுமையான தீவிரத்துடன் நம்புகிறேன்."

வியப்படைந்த கேஸவ சந்திரர் ஏன் என்று கேட்டார். ஸ்ரீராமகிருஷ்ணர் சொன்னார்: "இவ்வளவு அழகான



கேஸவ சந்திரர்

அறிவுசார்ந்த மனம் எப்படி கடவுள் இல்லாமல் இருக்க முடியும்? கடவுள் இல்லை என்று நீங்கள் தரும் அற்புதமான வாதங்களின் மூலமே கடவுள் இருக்கிறார் என்பதை நிரூபித்துக்கொண்டு இருக்கிறீர்கள். என் மனதில்கூட கடவுள் இல்லாது இருக்கலாம். ஆனால் இத்தகைய பேரறிவு படைத்த உங்கள் மனதில் கடவுள் இருப்பதால்தான் இத்தகு திறமையான வாதங்கள் எழுந்தன."

கேஸவ சந்திரர் எழுந்து ஸ்ரீராமகிருஷ்ணரின் பாதங்களைத் தொட்டு வணங்கி, "நீங்கள் என்னைத் தோற்கடித்து விட்டீர்கள்" என்றார். பின்னர் அவர் வாழ்நாள் முழுதும் ஸ்ரீராமகிருஷ்ணரின் தீவிர பக்தராகவே இருந்தார்.

இந்த அற்புதம் எப்படி நிகழ்ந்தது! கேஸவ சந்திரர் தம் மாணவர்களிடம் கூறினார்: "இவர் மிகவும் அபாயகரமானவர்! எதுவுமே சொல்லாமல் என்னை ஏமாற்றி விட்டார். இதுவரை நான் அறிந்திராத அருட்பிரகாசத்தில் என்னை ஆழ்த்தி விட்டார். அவருடைய அருகாமையில் என் வாழ்க்கையின் பேரானந்தத்தை உணர்ந்தேன்."

பகவானின் ஆழ்ந்த மோன சமாதியின் முன் அமர்ந்த பால்பிரண்டன் போன்றோரின் அனுபவமும் இத்தகையதன்றோ! பகவான் ரமணர் அறைந்த ஞான முரசின் முழக்கத்தைக் கேட்டவர்கள் அனைவரும் இம்மாயையாகிய உறக்கத்தினின்றும் விழித்தெழுவர்.

**அண்ணாமலை நின் அறிவு முரசு ஒலியை**
**விண்ணே அதிர விழியார் விழித்து, உண்மைக்**
**கண்ணே திறக்க, கருணையால்தான் அறைந்து, இம்**

*மண்ணே ரமண மகாவடிவில் வந்து அருளித்*
*தண்ணார் விழியால் தடுத்தருளும் சத்குருவைப்*
*பெண்ணே அறிந்து நீ பேரின்பம் உற்று, உயர்வான*
*பண்ணால் எழுப்பினோம், பாராய், பகவன் அருள்*
*உண்ணாய்; இனியும் உறங்கேல்ஓர் எம்பாவாய்!*

*- (ரமண திருவெம்பாவை, 6)*

ஆழ்ந்த அறியாமை உறக்கத்தில் கண் மூடியுள்ள உன் அகக்கண் திறக்கும்படி, தனது ஆன்மிக முரசினை ஆகாயம் அதிரும்படி தன் பேரருளால் அறைந்து உன்னை எழுப்ப வேண்டி, அந்தப் பரம்பொருளே சத்குருவான ரமண பகவான் வடிவில் வந்து, தனது குளிர்ந்த விழிகளால் நம்மைத் தடுத்தாட் கொள்ள வேண்டி அவதரித்துள்ள நம் சத்குருவை அறிந்துகொண்டு நீ பேரின்பம் உறுவாய். அதற்காகவே உன்னை எழுப்பவேண்டிப் பாடுகிறோம். இனியும் உறங்காதே; எழுந்திருந்து பகவான் அருள் அமுதத்தை உண்ணுவாய் என்று பாடுகிறாள் முருகநாயகி.

தட்சிணாமூர்த்தி ஸ்தோத்திரத்தில் தன் ஒளிமிளிரும் கண்ணால், "தழல் விழிக்குரு" என்று முதிர்ந்த சாதகர்கட்கு அருளும் சிவகுருவே, ஆத்மிக சாதனையில் இன்னும் முதிராத பக்தர்மீது பேரருட்கொண்டு "தண்ணார் விழியால் தடுத்தருளும் சத்குரு" என்று குளிர்ந்த விழிகளால் நம்மை வழிநடத்தும் பகவானின் பெருங்கருணையைப் பாடுகிறார்.

சத்குருவின் இந்த ஞானமுரசு அறைதலை ஐதரேய உபநிஷத பாஷ்யத்தில் ஸ்ரீசங்கரர் விளக்குகிறார். "பரம காருணிகேன ஆசார்யேண மஹாவாக்ய பேர்யாயாம். கர்ண மூலே தாடயமானாய" என்று அழகிய உருவகத்தால் விளக்குகிறார். ஆழ்ந்த அறியாமை உறக்கத்தில் இருக்கும் தனது சீடனை எழுப்புவதற்காக 'தத்வமஸி', 'அஹம் பிரஹ்மாஸ்மி', 'ப்ரக்ஞானம் ப்ரஹ்ம', 'ஸர்வ கல்விதம் ப்ரஹ்ம' என்ற மஹா வாக்யங்களாகிய பேரிகைகொண்டு, அவனது செவியின்

*அடியிலே போய் முரசறைந்து, 'நீயே ப்ரஹ்மம்' என்று அறிவித்து எழுப்புகிறார் சத்குரு.*

*அந்த சத்குருவால் நமது அறியாமை உறக்கத்தில் இருந்து எழுப்பப்பட்டவுடன், மீண்டும் அறியாமை உறக்கத்தில் ஆழ்ந்துவிடாது, அவரது திருவருளை திருவடியை இடைவிடாது சுற்றியிருத்தலே ஆன்மிக சாதனை. "என்னைக் கைவிடாதே!" என்று இடையறாது அவனைத் தொழுதலே பரபக்தி.*

*பரமநின் பாதம் பற்றறப் பற்றும்*
*பரவறி வறியரில் பரமன்*
*பரமுனக்கு எனஎன் பணியறப் பணியாய்*
*பரித்திடும் உனக்கெது பாரம்*
*பரமநிற் பிரிந்துஇவ் உலகினைத் தலையில்*
*பற்றியான் பெற்றது போதும்*
*பரமனாம் அருணா சலஎனை இனிஉன்*
*பதத்தினில் ஒதுக்குறப் பாரேல்.*

*- (அருணாசல பதிகம், 9)*

*காந்தம் இரும்புபோல் கவர்ந்தெனை விடாமல்*
*கலந்துஎனோடு இருப்பாய் அருணாசலா*

*- (அக்ஷரமணமாலை, 16)*

*அம்புவில் ஆலிபோல் அன்புறுஉனில் எனை*
*அன்பாக் கரைத்தருள் அருணாசலா*

*- (அக்ஷரமணமாலை, 101)*

*[அம்பு: நீர், கடல்; ஆலி: பனிக்கட்டி. நீயும் நானும் உண்மையில் பனிக்கட்டியும், நீரும் போன்றே ஒரே பொருளே ஆனவர்கள். நமது வெளித் தோற்றத்தில்தான் வேறுபாடு உள்ளது என்கிறார் பகவான்].*

*அண்ணா மலையாய் அடியேனை*
*ஆண்ட அன்றே ஆவிஉடல்*
*கொண்டாய் எனக்கோர் குறையுண்டோ*
*குறையும் குணமும் நீயல்லால்*

*எண்ணேன் இவற்றை என்னுயிரே*
*எண்ணம் எதுவோ அதுசெய்வாய்*
*கண்ணே உன்தன் கழல்இணையில்*
*காதல் பெருக்கே தருவாயே.*

*- (அருணாசல நவமணிமாலை, 7)*

இதுவே பூரண சரணாகதி; பரபக்தி. அத்வைத பக்தி. இன்றுமுதல் என் வாழ்வில் எனக்குத் தேவை ஒன்றுமே இல்லை. எனது உடல், ஆவி அனைத்தும் உன்னதே. உனது அருளின்படியே என் வாழ்வில் எல்லாம் நடப்பதாக என்கிறார் பகவான்.

இந்தக் கருத்தினையே விரிவாக திருவருட்பாவில் வள்ளலார் பாடுவதைக் காண்போமா!

*எழுவகைப் பிறவிகளுள் எப்பிறவி எய்துகினும்*
*எய்துக; பிறப்பில் இனிநான்*
*எய்தாமை எய்துகினும் எய்திடுக; இருமையினும்*
*இன்பம் எய்தினும்எய்துக;*
*வழுவகைத் துன்பமே வந்திடினும் வருக; மிகு*
*வாழ்வு வந்திடினும் வருக;*
*வறுமை வருகினும்வருக; மதிவரினும் வருக; அவ*
*மதிவரினும் வருக; உயர்வோடு*
*இழிவகைத்து உலகின்மற்று எதுவரினும் வருக; அலது*
*எதுபோகினும் போக; நின்*
*இணையடிகள் மறவாத மனம்ஒன்று மாத்திரம்*
*எனக்குஅடைதல் வேண்டும் அரசே.*

பொருள்: பல்வேறு வகைப் பிறவிகளுள் எனக்கு எது வந்தாலும் சரி; பிறப்பே வராமல் இருந்தாலும் சரி இம்மை, மறுமை என்ற இரண்டு பிறவிகளிலும் இன்பம் வந்தாலும் சரி; கொடிய துன்பங்கள் வந்தாலும் சரி; மிகுந்த செல்வமோ, அல்லது வறுமையோ எது வந்தாலும் சரி; என்னை எல்லாரும் மதித்தாலும் சரி; அவமதித்தாலும் சரி; எது வந்தாலும் சரி; எது போனாலும் சரி; எல்லாமும் எனக்கு ஒன்றே. நான்

*வேண்டுவது ஒன்றே ஒன்றுதான். உனது திருவடிகளை கணப்போதும் மறவாத பரபக்தி ஒன்றே நான் வேண்டுகிறேன் என்கிறார் வள்ளலார்.*

*சாதகன் ஆரம்பத்தில் தனது இறைவனை இஷ்ட தெய்வ வடிவிலே கண்டு மகிழ்கிறான். பக்தன், கண்ணப்பன் காளத்திநாதனைக் கண்டது போலும், அப்பரின் கயிலைக் காட்சி போலும், கண்ணனையே எண்ணி நடமிட்ட சைதன்யர் போலும், காளி அன்னையைக் காணவேண்டித் தன் கழுத்தையே துணிக்கத் துணிந்த ஸ்ரீராமகிருஷ்ணர் போலும் பக்தியில் ஆழ்கிறான் பக்தன்.*

*ஆரம்பநிலையில் இஷ்டதெய்வத்தைத் தீவிரபக்தியால் கண்ட இத்தகு அன்பு, பின்னர் பரபக்தியாய் பரிணமிக்கும் பக்தியின் உயர்வை அக்ஷரமணமாலையாய் பாடிய பகவான், பின்னர் சாதகன் பக்குவம் அடைந்தபின் இறுதி நிலையைக் கூறுகிறார்.*

***........ ஆயினும்அம் — மெய்ப்பொருளின்***
***உண்மையில்தன் உண்மையினை ஓர்ந்துஒடுங்கி ஒன்றுதலே***
***உண்மையில் காணல் உணர்.***

*- (உள்ளது நாற்பது, 8)*

*நாமதேவர், திருக்கச்சி நம்பி போன்று எவ்வளவுதான் தனது இஷ்ட தெய்வத்தை நேரிலே கண்டு அளவளாவிக் கொண்டு இருந்தாலும், இறுதியில் அந் நாமரூபம் மறைந்தே தீரும். அந்த நாமரூபத்தைத் தாண்டி பரமார்த்தத்தில் ஒன்றாக அத்வைத நிலை அடைதலே இறுதிநிலை. உள்ளம் எதுவோ அதுவாகிய ஆத்மாவில் தான் என்றும் உணர்வு ஒன்றுபடக் கரைதலை உணர்ந்து ஜீவபோதம் சிறிதும் மிச்சமின்றி ஒடுங்கி ஒன்றாவதே கடவுளை உள்ளபடி காண்பதாகும். இந்த அத்வைத நிலையை அடியார்க்கும் தந்து அவனைப் பூர்ணமாக்கவே,*

*நாமரூபம் கடந்த பரம்பொருள் தற்காலிகமாக ஸத்குரு வடிவம் கொள்கிறது (நம்மை வழிநடத்துவதற்காக).*

*கோண்அறஓர் மான்காட்டி மானை ஈர்க்கும்*
*கொள்கைஎன அருள்மௌன குருவாய்வந்து*

*- (தாயுமானவர்)*

*காட்டுமானைப் பிடிப்பவனும், காட்டு யானையைப் பிடிப்பவனும், தன்னால் பழக்கப்பட்ட மானையும், யானையையும் கொண்டுவந்து அவை முன் நிறுத்துகிறான். ஒரு மனிதன் வேறு இனமாதலால், காட்டு யானையோ மானோ மறைவிடத்தை விட்டு வெளியே வராது. ஆனால் தன் இனமாகிய மானையோ, யானையையோ கண்டவுடன் அச்சமின்றி வெளியே வருகிறது. அப்போது மனிதனால் பிடிக்கப்படுகிறது. அதுபோலவே மானுட சரீரம் தாங்கி இவனைப்போலவே ஒரு மனிதனாகவே வந்து, இம்மனிதனுடன் குரு-சிஷ்ய உறவைக் கொண்டால் அல்லாமல், இவனுக்கு சத்யத்தை உணர்த்த இயலாது. எனவே அந்த பரம்பொருள் குரு அவதாரத்தில் வருகிறது.*

*குருவடிவாகிக் குவலயம் தன்னில்*
*திருவடிவைத்து திறமிது பொருள் என*

*என்று மணிவாசகர் பாடுகிறார். ஸத்குருவின் உபதேசத்தில் தீவிர நம்பிக்கை கொண்டு ஆன்ம விசாரம் செய்தபின், சாதகன் தன்னைச் சுற்றி இருப்பதும் தன் உள்ளே இருப்பது அனைத்துமே அந்த சத்குருவே என்று உணர்கிறான்.*

*எங்கும் உள்ள கடவுளை இதயக் குகையில் காணலாம்*
*இங்கு கண்டபிறகுதான் இருப்பதெல்லாம் அவன்மயம்*

*- (சாதுஓம் சுவாமிகள்)*

*தன்மையின் உண்மையைத் தான்ஆய்ந்து —*
*தன்மைஅறின்*
*முன்னிலை படர்க்கை முடிவுஉற்று ஒன்றாய்ஒளிரும்*
*தன்மையே தன்னிலைமை தான்*

*- (உள்ளது நாற்பது, 14)*

*பகவானிடம் நாம் முற்றிலும் சரண் அடைய வேண்டும். அத்தகு பரிபூர்ண சரணாகதி எளிதானதல்ல. பகவானே இதை விளக்குவதைக் காண்போம்.*

*ஜோஷி: சரணாகதி எனக்கு எளிதாகத் தோன்றுகிறது. நான் சரணாகதி வழியையே பின்பற்ற விரும்புகிறேன்.*

*பகவான்: சரணாகதி எளிதாகத் தோன்றும்தான். ஏனெனில் 'சரணாகதி' என்று வாயால் சொல்லிவிட்டால் போதும். சத்குருவிடம் பாரத்தை இறக்கி வைத்துவிட்டு, நம் விருப்பம்போல் எதுவும் செய்யலாம் என்று நினைக்கின்றனர். ஆனால் சரணாகதி செய்தபின்னர் விருப்பு, வெறுப்பு எதுவுமே இருக்கக்கூடாது. நாம் முழுமையாக இல்லாது போகவேண்டும். எல்லாம் இறைவனே. நம்மிடத்தில் அவன் மட்டுமே இருத்தல் வேண்டும்.*

*- (அனுதினமும் ஸ்ரீபகவானுடன், ப. 72)*

*ஒருசமயம் அன்பர்கள் வந்து பகவானை அணுகி, "என்னை முமுட்சு ஆக்குங்கள்; மோட்சம் தாருங்கள்" என்று கூறினர். "எல்லோரும் பக்தியையும், மோட்சத்தையும் வேண்டுகின்றனர். நான் அவர்களிடம் 'உங்களை எனக்கு முழுமையாகத் தந்துவிடுங்கள்' என்றால் அவர்கள் தர மாட்டார்கள். பின் அவர்கள் வேண்டுவது மட்டும் எப்படிக் கிடைக்கும்?"*

*- (அனுதினமும் ஸ்ரீபகவானுடன், 2-1-46)*

*பகவான் புத்தரிடம் ஒருவர், "பகவானே! நான் விரும்புவது பேரானந்தமே" என்றார். புத்தர், "அது மிகச் சுலபம்! உனது வேண்டுகோளில் உள்ள 'நான்' மற்றும் 'விரும்புதல்' இவற்றை அழித்துவிடு. இருப்பது பேரானந்தம் ஒன்றே" என்றார்.*

I want happiness *என்பதில்* 'I' *என்பதையும்* 'want' *என்பதையும் எடுத்துவிட்டால், இருப்பது* 'Happiness' *ஆனந்தம் ஒன்றுதான். பகவான் கூறும் வழி இதுவே.*

'நான்' என்னும் தன்முனைப்பு — அகங்காரத்தையும், உனது இடையறாத ஆசைகளையும் நீக்கிவிடின், இருப்பது ஆனந்தமயமாகிய ஆத்மா — சத்-சித்-ஆனந்தம் — ஒன்றே.

சரணாகதி என்னும் அடைக்கலத்தினைப் பற்றி பகவான், ஜோஷியின் கேள்விக்கு விளக்கம் அளித்ததைக் கண்டோம். இதைக் குறித்து நாவுக்கரசர் திருமுறையில் இரு புதிய கருத்துக்களைக் கூறுகிறார்:

*படைக்கலமாக உன் நாமத்து எழுத்துஅஞ்சுஎன் நாவில்கொண்டேன்*
*இடைக்கலம் அல்லேன் எழுபிறப்பும் உனக்கு ஆட்செய்கின்றேன்*
*துடைக்கினும் போகேன் தொழுது வணங்கித் தூநீறுஅணிந்துஉன்*
*அடைக்கலம் கண்டாய் அணிதில்லைச் சிற்றம்பலத்து அரனே*

*- (திருமுறை 4-81-8)*

'இடைக்கலம்' என்றால் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு மட்டும் ஒருவரிடம் அடைக்கலமாதல். நான் உன்னிடம் குறிப்பிட்ட நோக்கத்திற்காகவோ, குறிப்பிட்ட காலத்துக்காகவோ சரண் புகவில்லை. என்னை முழுதுமாக எல்லாக் காலத்துக்குமே உன்னிடம் அடைக்கலமாக ஒப்படைத்தேன் என்ற பூர்ண சரணாகதியை 'இடைக்கலம் அல்லேன்' என்ற சொற்றொடர் குறிப்பிடுகின்றது. அதேசமயம் அடைக்கலம் ஏற்றவர் மனம்மாறி ஏற்றுக் கொள்ளாமல் விட்டுவிட்டு, என் எதிரில்கூட நிற்காதே என்று சொல்லலாம் அல்லவா? அதை மனதிற்கொண்டே, 'துடைக்கினும் போகேன்' என்று அப்பர் உறுதியாய்க் கூறுகிறார். இதுவே அடைக்கலத்தின், சரணாகதியின் அடிப்படை.

இதுபோன்றே மணிவாசகரும் அடைக்கலப் பத்தில் 'உடையாய்' (என்னை உடையவனே) என விளித்து,

உடையவனுக்குரிய கடமையையும் நினைவூட்டுகிறார். என் பிறவியை நீ போக்கவேண்டும் என்ற முறையில் வேண்டிக் கொள்ளாமல், 'என் பிறவியை வேர் அறுப்பவன் நீதானே' என்று இறைவன் கடமையை அவனுக்கு நினைவூட்டுகிறார்.

பெரும் பெருமான், என் பிறவியை வேர் அறுத்து, பெரும் பிச்சுத்
தரும் பெருமான், சதுரப் பெருமான், என் மனத்தின் உள்ளே
வரும் பெருமான், மலரோன், நெடுமால், அறியாமல் நின்ற
அரும் பெருமான்! உடையாய்! அடியேன் உன் அடைக்கலமே.

- (திருவாசகம், அடைக்கலப்பத்து-3)

இப்பாடலில் இறைவன் அருட்செயலாக இரண்டு உள்ளன. பிச்சுத் தருவது ஒன்று. பிறவியை வேரறுத்தல் இரண்டு. இவ்வுடலைச் சார்ந்த புலன்கள், பொறிகள் அவற்றுக்கு உரிய இயல்போடு இருக்கும்வரை பிறவிமேல் பற்று இருந்தே தீரும். புலன்கள், பொறிகள் ஆகிய கருவி, கரணங்கள் செயலற்றுப் போனால் ஒழியப் பிறவிப் போக்குதல் இயலாது. எப்படி இந்த முடிச்சை அவிழ்ப்பது? பெருமான் சதுரப்பாடு நிறைந்தவன், திறமை மிக்கவன். ஆதலால் அடியவரின் பிறவியை அறுப்பதற்குமுன் அடியவரைப் பித்தனாகச் செய்தான். அதாவது அடியவரது பொறிகளும், கரணங்களும் தம் தொழிலை மறக்குமாறு செய்தான். அந்தப் பிச்சு மயக்கத்தில் அடியார் இருக்கும்போது பிறவியை வேரறுத்தான். ஒரு மருத்துவர் ரணசிகிச்சை செய்யும்போது முதலில் மயக்கமருந்து கொடுத்து அவனைத் தன்வயம் இழக்கச் செய்து, அந்த மயக்கத்தில் அவன் ஆழ்ந்து இருக்கும்போது, சிகிச்சையை வெற்றிகரமாக முடிக்கிறார் அல்லவா? அதுபோன்றே இறைவன் செய்யும் இந்தச் சிகிச்சை.

பகவானும் இதே கருத்தினை,

பித்துவிட்டு எனைநேர் பித்தன் ஆக்கினைஅருள்
பித்தம் தெளிமருந்து அருணாசலா

என்று பாடுகிறார்.

முருகனாரும் பகவானிடம் தான் அடைந்த அடைக்கலச் சிறப்பை இவ்வாறு பாடுகிறார்.

மயர்ந்திடச் செய்யுமா மாயையைப் பீறிநின்
மாணடியார்
வியந்திட நின்றனர் வேங்கட நாதஇவ்
வெவ்வினையேன்
உயர்ந்தநின் சேவையை உற்றிடப் பெற்றுநான்
ஓரொருகால்
அயர்ந்தனன் காண்உடை யாய்அடி யேன்உன்
அடைக்கலமே.

- (ரமண சந்நிதிமுறை, 285)

திருவாசகம் 409ஆவது பாடலில், அழகான ஒரு கருத்தை மணிவாசகர் தெரிவிக்கிறார். "அடைக்கலம் வேண்டும் நோக்கமேயின்றி உன்னிடம் வந்தால்கூட நீ அவனை அன்போடு ஏற்றுக் கொள்கிறாய். உன் தலைமேல் உள்ள பாம்பும் கங்கையும் உன்பால் அடைக்கலம் என்றே வரவில்லை. அவை ஆணவத்துடனே வந்தன. அவற்றை நீ அன்புடன் ஏற்றுக்கொண்டாய். அவை இரண்டும் உன்னை 'உடையவன்' என்று ஏற்றுக் கொண்டனவோ இல்லையோ தெரியாது. ஆனால் நான் உன்னை 'உடையான்' என்று ஏற்றுக்கொண்டு உன்னிடம் அடைக்கலமாக வந்துவிட்டேன் என்கிறார் மணிவாசகர்.

தான் பகவானிடம் பூரண சரணாகதி செய்ததையும் அதன்பின் அவர் தமக்களித்த உபதேசத்தையும் முருகனார் அழகுறப் பாடுகின்றார்.

சென்ற சென்ற திசைஎல்லாம்
செல்வா உனது திருப்புகழ்கேட்டு

*உன்தன் அடிக்கே ஒப்படைத்தேன்*
*உடலும் பொருளும் உயிரும்எலாம்*
*குன்ற மனைய குணக்கடலே*
*குலவு நிலைஎன் கூறுஎன்றேன்*
*நின்ற நிலைக்கே நில்என்றான்*
*நீத ரமண நெடியோனே.*

*- (ரமண சந்நிதிமுறை, 967)*

*ரமண பகவானிடம், என் உடல், பொருள், ஆவி அனைத்தையும் ஈந்து, அவருக்கே அடைக்கலம் ஆயினேன். நான் செய்யவேண்டியது என்ன என வினவினேன். ஒன்றுமே செய்ய வேண்டாம். இருந்தபடியே இரு! என்று அவர் உபதேசித்தார் என்கிறார் முருகனார்.*

*"சும்மா இரு! சொல்லற!" என்ற அநுபூதி உபதேசமும் "இருந்தபடி இருங்கோள்"! என்ற அருணகிரியின் அலங்கார உபதேசமும் இதனையே கூறுகின்றன.*

*சுகக்கடல் பொங்கச் சொல்லுணர்வு அடங்கச்*
*சும்மா பொருந்திடங்கு அருணாசலா*

*என்ற பகவானின் அக்ஷரமணமாலைக் கண்ணியும், அடைக்கலம் முழுமையாக ஆகும்போது சாதகனின் இருந்தபடி இருக்கும் நிலையைச் சுட்டுகின்றன.*

*உரையாடலை மீண்டும் தொடர்வோம்.*

*பகவான் பணியில் தங்கள்,*

*ராம் மோஹன்*

---

# ரமணோதயம்

Voluntary Services

| | |
|---|---|
| K. *சுரேஷ் ஜானகிராமன்* | *9444127770* |
| *ராஜேஷ்* M.S. | *9840075778* |
| *வஸந்தா ராகவன்* | *9445432335* |

# கனவில் வந்த தலைவன்

**நொச்சூர் வெங்கடராமன்**

**தமிழாக்கம்: கௌதமன்**

*என்னுள்ளே எப்போதும் காத்திருந்த நாயகனே?*
*அந்த சோகம் நிறைந்த நாட்கள்*
*என் ஞாபகத்தில் எழுகின்றன.*
*என்னுள்ளே இருந்தாலும் உன்னைக் கண்ணுறாத*
*அந்த மனத்தளர்ச்சி என்னைக் கவ்வியது*
*கஸ்தூரிமானின் உடலுக்குள்ளே உள்ள*
*அந்த நறுமணச் சுரப்பியினை*
*தன் உள்ளேயே உள்ளது என்று அறியாது*
*கஸ்தூரிமான் இங்கும் அங்கும்*
*பயனற்ற தேடுதலைச் செய்கிறதல்லவா*
*அதுபோன்றே நிரந்தர சாந்தியைத் தேடும்*
*எம்முயற்சியும் அந்நாளில் இருந்தது*
*தலைவ! உன்னைத் தேடி தேடி*
*சுகங் கரைந்து அழுதபோது*
*என் இதயம் முழுதுமே சோகத்தால் நிரம்பியது.*
*காத்திருத்தலின் முடிவில் என் கனவில்*
*என் நாயகன் நகைப்புடன் தோன்றினான்*
*'அன்புக்குரியாய்! எழுந்திரு! எழுந்திரு!*
*இப்போதே, இங்கேயே*
*உன் ஆன்ம விடுதலை நிகழ்ந்து விட்டது!'*
*என்னை எனக்கு அறிவித்த என் தலைவன்*
*அக்கணமே மறைந்தான்.*
*அந்த ஜோதி வடிவம்*
*என்னை ஆழ்ந்த சாந்தியில், ஆனந்தத்தில்*
*பேரொளியில் ஆழ்த்தியது.*

# விதைக்குள் மரம், நீரில் உப்பு, அம்புவில் ஆலி

**சேலம் சேதுகுமாரன்**


*சாந்தோக்கிய உபநிஷத்தில் உத்தாலகர் தனது மகனாகிய ஸ்வேத கேதுவிற்கு ஆத்ம ஞானத்தை மிக அழகிய எடுத்துக்காட்டுடன் விளக்குகிறார். குருகுலம் முடிந்து வந்த ஸ்வேத கேதுவிற்கு இன்னும் ஆன்மிகப் பரிணாமம் வரவில்லை. எனவே தந்தையிடம் சில அடிப்படைக் கேள்விகளைக் கேட்கின்றான்.*

*“தந்தையே! இந்தப் படைப்பு அனைத்தும் ஒரே ஓர் ஆதார சக்தியில் இருந்து தோன்றுவதாக வேதாந்திகள் கூறுகின்றனர். இந்தப் பல்லாயிரக் கணக்கான வேறுபாடுகள் அனைத்தும், அண்டங்கள் அனைத்தும் பெயரும், ஒருவும் இல்லாத ஒரே ஓர் ஆதார வஸ்துவிலிருந்து தோன்றி இருக்கும் என்பதை நம்ப முடியவில்லையே!” என்கிறான்.*

*உத்தாலகர் அதற்கு நேரிடையாகப் பதில் கூறாமல், “மகனே! நம் வனத்தில் ஆலமரம் ஒன்று உள்ளது அல்லவா? அந்த ஆலமரத்தின் பழம் ஒன்றைக் கொண்டு வா” என்றார். ஸ்வேத கேது ஆலம் பழத்தைக் கொண்டு வந்தது தந்தான்.*

*“இந்தப் பழத்தைக் கிள்ளு” என்றார்*

*“கிள்ளி விட்டேன், தந்தையே”*



“அதை முழுதும் உரித்துப் பார், மகனே! உள்ளே என்ன இருக்கிறது”

“சின்னஞ்சிறு விதைகள் உள்ளன”

“அந்த மிகச் சிறிய விதை, கடுகினும் சிறியது, அதை எடுத்துக் கிள்ளிப் பார்”

ஒரு சிறு விதையை அவ்வாறே எடுத்து, ஸ்வேத கேது கிள்ளிப் பார்க்கிறான்.

“என்ன காண்கிறாய் மகனே!”

“ஒன்றுமே கண்ணுக்குத் தெரியவில்லை, தந்தையே!”

“மகனே! உன் கண்ணுக்குப் புலப்படாமல் அந்த விதைக்குள் கிடக்கும் ஒரு மிக நுண்ணிய விதைக்குள், இலைகளும், கிளைகளும், விழுதுகளும் கொண்ட இந்தப் பிரம்மாண்டமான ஆல மரமாய் உருவாகின்றது. இந்த மரம் முழுதுமே இந்தச் சிறு விதைக்குள் அடங்கி உள்ளது. அதைப் போலவே இந்த பிரம்மாண்டமான அண்டம் முழுதுமே கண்ணுக்குப் புலப்படாத ‘சத்’ என்னும் இருப்பு - அதிஷ்டானத்திலிருந்து - உருவாகி உள்ளது” என்றார்.

ஆலம் விதை மிகவும் நுண்ணியது. அதற்குள் இவ்வளவு பெரிய மரமும், அதன் கிளைகளும், விழுதுகளும், காயும், பழமும் அவற்றின் நிறம் சுவை அனைத்துமே அடங்கிக் கிடந்தன! இந்த விதையை எங்கே நட்டாலும் இதே நிறம், இதே குணம், இதே தோற்றம் கொண்ட ஆலமரம் உருவாகும். வேறு ஒன்றிலிருந்து இது உருவாகாது. இதனின்று வேறு

ஒன்று உருவாகாது. இந்த மரம் முழுவதுமே இந்தச் சின்னஞ்சிறிய விதையில் சூட்சுமமாக கிடக்கிறது. ஒவ்வொரு விதையிலும் மரம் முழுவதும், மலரின் மனமும், மற்ற எல்லாப் பண்புகளும் உள்ளடங்கி உள்ளன. மறுபடியும் அம்மரத்தில் விதைகள் நிறைந்த கனிகள் உண்டாகும் அதிசய சக்தி உள்ளது.

"தெள்ளிய ஆலின் சிறுபழத்து ஒருவிதை
தெள்நீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆள்பெரும் படையொடு
மன்னர்க்கு இருக்க நிழல் ஆகும்மே."

என அதிவீரராம பாண்டியர் விளக்குகிறார்.

மீண்டும் ஸ்வேத கேது வினவுகிறான்.

"உலகம் முழுதும் தோற்றுவித்து எங்கும் பரவி உள்ளதாக நீங்கள் சொல்லும் இந்த ஆதார வஸ்து கண்ணுக்குப் புலப்படவில்லையே? இது இப்போது எங்கே மறைந்து போயிற்று?"

உத்தாலகர், இப்போது ஒரு இராசாயனச் சோதனை நடத்துகிறார்.

"மகனே! ஓர் உப்புக் கட்டி கொண்டு வா!"

"கொண்டு வந்தேன்" என்றான் ஸ்வேத கேது.

"அதைத் தண்ணீரில் போட்டுவிடு! நாளைக் காலை வா" என்றார்.

மறுநாள் காலை தந்தை, ஸ்வேத கேதுவிடம், "நேற்று நீ தண்ணீரில் போட்டாயே, அந்த உப்புக் கட்டியை கொண்டு வா!" என்றார்.

உப்பு எப்படி இன்னமும் இருக்கும்! அது நீரில் கரைந்து விட்டது.

ஸ்வேத கேது: அப்பா! உப்புக் கல் இல்லை. அது நீரில் கரைந்து போய் விட்டது.

*உத்தாலகர்: சரி, அந்தப் பாத்திரத்தின்மேல் பகுதியில் இருந்து கொஞ்சம் தண்ணீரை எடுத்து அருந்து.*

*ஸ்வேத கேது: இது உவர்ப்பாக உள்ளது.*

*தந்தை: அந்தப் பாத்திரத்தின் நடுவில் இருந்து அருந்திப் பார்.*

*மகன்: அதுவும் உவர்ப்பாகவே உள்ளது.*

*தந்தை: பாத்திரத்தின் அடியில் உள்ள நீரை அருந்திப் பார்.*

*அதையும் அருந்திப் பார்த்த ஸ்வேத கேது, அதுவும் உவர்ப்பாகவே இருப்பதாகக் கூறினான்.*

*தந்தை: சரி! அதைப் போய்க் கொட்டி விட்டு வா!*

*மகன் மீண்டும் வந்தவுடன், "நீ தண்ணீரில் போட்டாயே, அந்த உப்பு அழிந்து போய் விட்டதா" என்று கேட்டார்.*

*ஸ்வேத கேது: இல்லையே! ஏதோ ஓர் உருவில் அந்தத் தண்ணீரில், அது இருந்து கொண்டு இருக்கிறது.*

*உத்தாலகர் விளக்கினார், "மகனே! இவ்வாறே உலகம் முழுவதும் பரம்பொருள் மறைந்து நிற்கிறது. கண்ணுக்குப் புலப்படாமல் அனைத்திலும் அது இருக்கிறது. அதுவே 'சத்' அதுவே ஆத்மா. அதுவே நீ, 'தத் த்வம் அஸி'" என்றார்.*

*இந்த உபநிடதக் கருத்தினை நம்மாழ்வார் திருவாய் மொழியில் மிக அழகாகப் பாடுகிறார்.*

*"கரந்த சில் இடந்தொறும் இடம் திகழ் பொருள்தொறும்*
*கரந்து எங்கும் பரந்துளன் இவை உண்டகரனே"*

*பகவான் உபதேச உந்தியாரிலும் இக்கருத்தைக் குறிக்கிறார்.*

*"தானாய் இருத்தலே தன்னை அறிதலாம்*
*தான் இரண்டு அற்றதால் உந்தீபற*
*தன்மய நிட்டையீது உந்தீபற" - 26*

மேலும்

*"அம்புவில் ஆலிபோல் அன்புருவில் எனை*
*அன்பாய்க் கரைத்தருள் அருணாசலா"*

என அக்ஷரமணமாலையிலும் பகவான் பாடுவதும் இதுவே. ஒரே பொருளால் ஆன பனிக்கட்டியும், கடலும் பௌதிகத் தோற்றத்தில்தான் வேறுபடுகின்றன. அந்த வெளித் தோற்ற வேறுபாடு நீங்கி, பனிக்கட்டி நீரில் கரையும்போது வேறுபாடே இல்லாமல் ஒன்றாகவே ஆகின்றன.

## இனிவரும் திருநாட்கள் - 2016

| | | | |
|---|---|---|---|
| ஜூலை | 19 | செவ்வாய் | குருபூர்ணிமா |
| ஆகஸ்ட் | 7 | ஞாயிறு | குஞ்சு சுவாமிகள் தினம் |
| செப்டம்பர் | 1 | வியாழன் | அருணை விஜய நாள் |
| அக்டோபர் | 1 | சனி | நவராத்திரி விழா ஆரம்பம் |
| | 10 | திங்கள் | சரஸ்வதி பூஜை |
| | 11 | செவ்வாய் | விஜயதசமி |
| | 29 | சனி | தீபாவளி |
| டிசம்பர் | 03 | சனி | கார்த்திகை உற்சவம் ஆரம்பம் |
| | 12 | திங்கள் | கார்த்திகை தீபம் |

மேற்கண்ட விழா நிகழ்வுகளின் மாற்றங்களை அறிய ஆச்ரம இணையதளம் www.sriramanamaharshi.org பார்க்கவும்.

# நெஞ்சையள்ளும் குருவாசகக் கோவை

### பாவண்ணன்

வழக்கமாக நடைப்பயிற்சிக்கு நான் செல்லும் பூங்காவுக்கு அருகில் பழைய செய்தித்தாட்களையும் புத்தகங்களையும் வாங்கி விற்கக்கூடிய கடையொன்று உள்ளது. அதை நடத்தி வருபவர் ஒரு கன்னடியர். பல ஆண்டுகளுக்கு முன்னால் ஓர் அகராதியை மலிவான விலைக்கு அவர் எனக்குக் கொடுத்தார். அன்றுமுதல் எனக்கும் அவருக்கும் நல்ல பழக்கம் உருவாகிவிட்டது.

போன வாரம் ஞாயிறு அன்று மாலை நடைப் பயிற்சியை முடித்துக் கொண்டு சிறிது நேரம் அவருடைய கடைக்குச் சென்று வழக்கம்போல உரையாடிக்கொண்டிருந்தேன். அவர் எடைக்கு வாங்கிய புத்தகங்களின் குவியல் கடை வாசலில் இருந்தது. அதை ஒவ்வொன்றாக எடுத்துப் பார்த்துவிட்டு பக்கத்திலே அடுக்கி வைத்தபடி இருந்தேன். எல்லாமே கன்னட, தெலுங்கு புத்தகங்கள். சில தமிழ், வங்கமொழிப் புத்தகங்களும் இருந்தன. தன் மேசையில் இருந்த புத்தக அடுக்கிலிருந்து ஒரு புத்தகத்தை இழுத்து, “இந்தாங்க, இத பாருங்க. தமிழ் புஸ்தகம்தான். ஒங்களுக்குப் புடிக்குமேன்னு எடுத்து வச்சேன்” என்றபடி ஒரு புத்தகத்தை எடுத்துக் காட்டினார் அவர்.

வெளிர்நீல நிற அட்டையைக் கொண்ட புத்தகம். அட்டையில் பாஸ்போர்ட் படத்துக்குரிய அளவில் ரமணரின் படம் இருந்தது. புத்தகத்தின் பெயர் பரமார்த்த தீபம் என்னும் குருவாசகக்கோவை.



திருவாசகம் என்னும் சொல்லிலிருந்து குருவாசகம் என்னும் சொல்லை உருவாக்கியிருந்த விதம் முதற் கணத்திலேயே எனக்குப் பிடித்துவிட்டது. நூலாசிரியர் ஸ்ரீமுருகனார் என்பவர் ரமணர்மீது கொண்டிருந்த ஈடுபாட்டின் காரணமாக, அவருடைய உபதேசங்களைக் கேட்டபடியும் ஆசிரமத்திலேயே சேவை செய்தபடியும் தன் வாழ்நாளைக் கழித்தவர். அவர் கவிஞராகவும் இருந்ததால், ரமணரின் எண்ணங்களுக்குக் கவிதை வடிவம் கொடுக்க வேண்டும் என்று தோன்றியிருக்கிறது. கூடுதலான விவரங்களுக்காக நூலைப் பிரித்துப் படித்தேன். 1939-ஆம் ஆண்டில் திருவண்ணாமலையைச் சேர்ந்த ரமணாசிரமம் வெளியிட்ட புத்தகம் அது. நானூறுக்கும் மேற்பட்ட பக்கங்கள். ஆயிரத்துக்கும் மேற்பட்ட வெண்பாக்கள். எல்லாமே ரமணரின் உபதேசங்களை மையமாகக் கொண்டவை. நூலாசிரியரால் ஒவ்வொரு வெண்பாவுக்கும் கீழும் மிகச் சுருக்கமாக இரண்டு மூன்று வரிகளில் பொருளும் கொடுக்கப்பட்டிருந்தது. அந்த வடிவமைப்பு பிடித்திருந்ததால், தன்னிச்சையாக

ஒரு பக்கத்தை புரட்டி, அதிலிருந்த வெண்பாவைப் படித்தேன்.

*சித்தமலங் கெட்டு சிவமயமாய்த் தாமொளிரும்*
*வித்தகர்தாம் அல்லால் வேறாரே - உய்த்துணர்வார்*
*குற்றம் குறையொன்றும் கூடாப் பெருமைசால்*
*சிற்றம்பலத்தின் சிறப்பு*

வெண்பாவின் மொழியோட்டம் வசீகரமாக இருந்தது. சித்தமலம் என்னும் சொல் படித்த கணத்திலேயே மனத்தில் பதிந்து விட்டது. உயிர்கள் இறைவனைக் கண்டடைந்து சேர்வதை உயிர்களிடம் உறைந்திருக்கும் மும்மலங்கள் தடுத்தபடி இருக்கின்றன என்பது சைவ சித்தாந்தத்தின் நெறி. ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் ஒன்றாக்கி அவற்றை சித்தத்தில் வாழும் மலம் எனப் பொருள்படும்படி சித்தமலம் எனக் குறிப்பிட்டிருக்கும் கவித்துவம் கவர்ச்சி நிறைந்ததாக இருந்தது. ஆணவம் என்பது நெல்லில் உள்ள உமி போன்றதென்றும், கன்மம் என்பது நெல்லில் உள்ள முளை போன்றதென்றும், மாயை என்பது தவிடு போன்றதென்றும் எப்போதோ படித்த நினைவு வந்து போனது. நெல்லைச் சுற்றியும் உள்ள இப்பொருட்களைப் போல, மூன்று மலங்களும் சித்தத்தில் உறைந்து சித்தத்தை நேர்வழியில் செயல்படாதபடி தடுத்துக் கொண்டிருக்கின்றன என்னும் பொருளை, சொல்லாமல் சொன்னபடி இருந்தது அந்தப் புதிய சொல்.

அந்தச் சொல் ஊட்டிய உற்சாகத்தால் வேறொரு பக்கத்தைப் புரட்டி கண்ணில் தென்பட்ட வெண்பாவைப் படித்தேன்.

*உடலுணர்வை மாய்க்கல் உறுவதன்றி மெய்யாம்*
*திடமுயற்சி மற்றெதுவும் செய்யேல் - உடலகந்தை*
*தானே அகில சமுசார துக்கத்துக்*
*கானதோர் ஏது அறி*

*இந்த வெண்பாவிலும் உடலகந்தை என்னும் சொல் வசீகரமாக இருந்தது. அகந்தையை மன உலகம் சார்ந்த ஒன்றாகவே அனைவரும் எண்ணியிருக்கும் தருணத்தில் வெண்பாவை இயற்றியவர் உடகலந்தை என்று புதிதாக ஒரு சொல்லை உருவாக்கியிருப்பது விசித்திரமாகத் தோன்றியது. உடலகந்தை என்பது எதுவாக இருக்கக்கூடும் என்று ஒருகணம் திகைத்துப் பார்த்தேன். தளர்ந்து, நோய்வாய்ப்பட்டு, அழிந்து மண்ணோடு மண்ணாகிவிடக் கூடிய தசையாலான இந்த உடலையே 'நான்' என ஆணவத்தின் காரணமாக அல்லது அறியாமையின் காரணமாக நினைத்துக் கொள்ளும் பேதைமையையே அவர் சுட்டிக் காட்டுகிறார் எனத் தோன்றியது.*

*உடனே அந்தப் புத்தகத்தை பணம் கொடுத்து வாங்கிக் கொண்டேன். "படிச்சி பாருங்க, புடிக்கலைன்னா ரெண்டுமூணு நாளுக்குள்ள திருப்பி எடுத்தாந்துடுங்க" என்று நண்பர் எனக்கு வழக்கமாக கொடுக்கும் சலுகையையும் கொடுத்தார். புன்னகையோடு அவரிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டேன்.*

*ஸ்ரீமுருகனார் ரமணர் அருகிலேயே வாழும் பெரும்பேறு பெற்றவர். சீடர்கள் சூழ்ந்திருந்தபோது, அவர்கள் கேட்கும் கேள்விகளையும் அவற்றையொட்டி ரமணர் அளித்த விடைகளையும் அருகில் இருந்து கேட்டுத் தெரிந்து கொள்ளும் நற்பேறு பெற்றவர் அவர். சிறுகச்சிறுகக் கேட்ட அந்த உபதேச விளக்கங்களையே அவர் அழகான வெண்பாக்களாக இயற்றினார். ரமணரை அவர் இறைவனின் அவதாரம் என்றே எண்ணுகிறார். தன் பாடல்களில் அவரை பகவான் என்னும் சொல்லாலேயே குறிப்பிடுகிறார். ஒவ்வொரு நாளும் ரமணர் தன் உரையை நிகழ்த்தி முடித்ததும், அவர் உரைத்த அரிய கருத்துக்களை அழகான வெண்பாக்களாக வடித்து, அக்கருத்துக்கள் சரியாக அமைந்துள்ளனவா என ரமணரிடமே காட்டி*



*சரிபார்த்து வந்திருக்கிறார் ஸ்ரீமுருகனார். மொத்தத்தில் தத்துவ ஆராய்ச்சியியல், தத்துவ அநுசந்தானவியல், தத்துவ அனுபவவியல் என மூன்று இயல்கள். அவற்றில் 1254 வெண்பாக்கள். அரிதான கருத்தை எளிய சொற்களால் சொல்ல விழையும் விருப்பத்தை ஒவ்வொரு பாட்டிலும் புரிந்து கொள்ள முடிந்தது.*

*வரிசைப்படி படிக்காமல், விரல் புரட்டி நிறுத்திய பக்கத்தில் தெரிந்த வெண்பாவை மனம் போனபடி படித்தபடியிருந்தேன். எழுதப்பட்டு நூறு ஆண்டுகள் கடந்த நிலையிலும் சொற்கள் இன்றும் படிக்கும் வகையில் புதுமை குன்றா அழகோடு இருப்பதை ஆச்சரியத்துடன் உணர்ந்தேன்.*

***கள்ளப் புலத்தை கருத்தால் உழுதிடர்ப்பட்(டு)***
***எள்ளத் தனைமகிழ்வுக் கேங்குவோர் - உள்ளலெழும்***
***உள்ளப் புலத்தை உணர்வால் உழுதுவிளை***
***வெள்ளமகிழ் வேண்டார் வியப்பு***

கள்ளப்புலம், உள்ளப்புலம் என்ற எதிரெதிர் சொற் சேர்க்கைகளை வாய்க்குள்ளேயே சொல்லிப் பார்த்த போது மனம் துள்ளியது. உண்மையில் கள்ளப்புலம், உள்ளப்புலம் இரண்டும் வேறுவேறானதல்ல. புலம் ஒன்றே. மானுடனின் இதயம்தான் அது. கள்ளத் தன்மையோடு ஒரு பகுதி. கள்ளமின்மையுடன் இன்னொரு பகுதி. உண்மையான நல்ல விளைச்சலுக்கான விதைகளை ஏற்றுக் கொள்ளும்போது இதயத்துக்கு உள்ளப்புலம் என்ற பெயர் கிடைக்கிறது. அற்பமான சின்னஞ்சிறு விளைச்சலுக்கான விதைகளை ஏற்றுக் கொள்ளும்போது இதயத்துக்கு கள்ளப்புலம் என்ற பெயர் கிடைக்கிறது. அற்ப விளைச்சலுக்கு ஏங்கும் மக்கள் உண்மை விளைச்சலை ஏன் விரும்ப மறுக்கிறார்கள் என்பது புரியாத புதிர் என்கிறது வெண்பா. அந்தப் புதிர் அளிக்கும் வியப்புதான் வெண்பா.

அந்த வெண்பாவுக்கு அருகிலேயே இன்னொரு வெண்பாவில் பயன்படுத்தப்பட்டிருந்த ஓர் உவமை பொட்டில் அறைந்தமாதிரி இருந்தது.

உலகின் மயற்கை ஒழிந்தாலே உண்மை
குலவுபர முத்திகை கூடும் - உலகுக்கு
வற்புறுத்தி உண்மை வழங்கல் பரத்தைக்கு
கற்புறுத்துங் காமக் கதழ்

நம்பும்படி வற்புறுத்தி ஓர் உண்மையைச் சொல்வதே பிசகு என்னும் தொனி ஒலிப்பதை ஒருகணம் உணர முடிந்தது. பிறகுதான் எனக்கும் அந்த உண்மை புரிந்தது. உண்மையை அறிந்துகொள்ள வேண்டும் என்கிற நாட்டமும் தேடலுணர்வும் இல்லாத ஒருவனிடம் எடுத்துரைக்கும் ஒவ்வொரு வாசகமும் வீணானது. விழலுக்கு இறைத்த நீர். தேடலுணர்வு உள்ளவன் நெருங்கி வந்து கேட்கும்போது, எவ்வளவு வேண்டுமானாலும் எடுத்துரைக்கலாம். பாத்திரத்துடன் வருபவன் அவன். நாம் வழங்கும் ஒவ்வொன்றும்

*அந்தப் பாத்திரத்தை நிரப்பும். பாத்திரமே இல்லாதவனிடம் நாம் வழங்கும் எதுவும் தங்காது. எல்லாம் மண்ணோடு மண்ணாகப் போகும். ஆன்மிகக் கருத்துக்கு மட்டுமல்ல, பொதுவான எக்கருத்துக்கும் இது பொருந்தக்கூடிய ஒன்று. இதைப் புரிந்து கொள்ள பரத்தைக்கு கற்பை வலியுறுத்துவதுபோல என அவர் பயன்படுத்தியிருக்கும் உவமையும் பொருத்தமாக இருப்பதுபோலவே தோன்றியது.*

***பின்னப் படாவிசும்பு பேணுங்கால் காரியமாம்***
***பின்னத் தசும்பே பிறங்காதேற் - பின்னத்***
***தசும்பசைவு கொண்டு தசும்புதனில் உற்ற***
***விசும்பசைவு கூறன் மிகை***

*இந்த வெண்பாவிலும் விசும்பு, தசும்பு என்னும் எதிரெதிர் சொற்களைக் கையாண்ட விதமே என் கவனத்தை இழுத்தது. விசும்பு என்பது வானம். தசும்பு என்பது நீர்நிரம்பிய மண்ணாலான குடம். அழகான ஒரு காட்சியை இங்கே விவரிக்கிறது வெண்பா. மேலே அகண்ட வானம். தரையில் குடத்தின் நீருக்குள் நிழலாகத் தெரியும் வானத்தின் பிம்பம். ஒன்று நிஜவானம். இன்னொன்று நிழல் வானம். எது நம்மை மயக்குகிறது? நிஜமான வானத்தின் கோலமா? நிழல் வானத்தின் கோலமா? நாம் எதை நாடப் போகிறோம்? நிஜத்தையா, நிழலையா? ஒரு புதிர்போல நீளும் வெண்பாவின் பாதை முடிவற்ற சாத்தியத்தைக் கொண்டிருக்கிறது. முடிவற்ற சாத்தியத்தைக் கொண்டிருப்பதாலேயே, வெண்பாவின் அழகு தனித்துத் தெரிகிறது.*

*இன்னொரு பக்கத்தில் எளிமையான வடிவில் ஒரு வெண்பாவை படித்ததும் மனத்தைத் தொட்டுவிட, அதையே ஆறேழுமுறை மீண்டும் மீண்டும் படித்தபடி இருந்தேன்.*

***உடலொழிந் தில்லை உலகம் - உடலும்***
***உளமொழிந் தோர்காலும் இல்லை - உளமும்***

*உணர்வொழிந் தோர்காலும் இல்லை - உணர்வேயும்*
*உண்மையொழிந் தோர்காலும் இல்*

சின்னச்சின்ன சமன்பாடுகளை அடுக்கியபடி மேலேறிச் செல்லும் அழகான வெண்பா. உடல் இல்லாமல் இந்த உலகமில்லை. உள்ளம் இல்லாமல் இந்த உடலும் இல்லை. இந்த உடலுக்கு ஒரு பொருளையும் தகுதியையும் வழங்குவது இந்த உள்ளம். உள்ளத்தின் அடிப்படை உணர்வு. உணர்வு என்பது இல்லாத உள்ளம் உள்ளமே இல்லை. உணர்வுக்கு அடிப்படையானது உண்மை. உண்மையின்றி உணர்வுக்கு ஒருவித பயனும் இல்லை. உண்மையே அடிப்படைக் கூறு. அதுவே ஞானம். அதுவே வாழ்க்கை. எது அந்த உண்மை? அதை வெண்பா நேரிடையாகச் சுட்டவில்லை. அறிந்து தெளியும் சாத்தியங்களை வாசிப்பவர்களுக்கு வழங்கிவிடுகிறது.

திருமந்திரத்தின் சாயலை உடைய இந்த வெண்பா, தன் எளிய சொற்கட்டுமானத்தாலேயே மனத்தில் மீண்டும் மீண்டும் மிதந்து வந்தபடி இருக்கிறது. இதேபோல எளிமையான இன்னொரு வெண்பாவை வேறொரு பக்கத்தில் பார்த்தேன்.

*அகந்தை அழிந்தால் அடியரும் ஆவர்*
*அகந்தை அழிந்தால் அறிஞரும் ஆவர்*
*அகந்தை அழிந்தால் அண்ணலும் ஆவர்*
*அகந்தை அழிந்தால் அருள்வெளி அன்றே*

பெரிய விளக்கம் எதுவும் தேவையில்லாமல் ஒரே வாசிப்பில் உண்மையை உணர்ந்து கொள்ளும்படி அமைந்திருக்கிறது வெண்பா. அகந்தையே அழிவுக்குக் காரணம். வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் ஒவ்வொரு படியிலும் அகந்தையைத் துறந்து சென்றபடி இருக்க வேண்டும். அகந்தையைத் துறக்கத் துறக்க அதுவரை சாத்தியப்படாத ஒவ்வொன்றும் நமக்குச் சாத்தியப்படுகிறது. அகந்தையை முற்றிலும்

துறக்கும்போதுதான், நாம் எவ்வளவு பெரிய அடர் இருளில் இருந்தோம் என்பது புரியும். அந்த இருளிலிருந்து வெளியேறினால் மட்டுமே, நம்மால் வெளிச்சம் படர்ந்த வெளியை அடைய முடியும். ஆனந்தமும் அருளும் நிறைந்த வெளி அது.

சொற்சேர்க்கையின் தன்மையால் மனத்தைக் கவரும் வெண்பாவைத் தேடித்தேடி பக்கங்களைப் புரட்டியபோது ஒரு வெண்பா கண்ணில் பட்டது.

**முதலையைக் கட்டையா முன்னிப் புனற்கு**
**மதலையாக் கொண்டுகைத்தான் மானும் - குதலை**
**உடன்மல்கும் ஆர்த்தியராய்த் தம்முயிரைக் காண**
**உடன்முயல்வ தாரைவுரைப்பார் மாண்பு**

முதலை ஆற்றில் வாழும் விலங்கு. மதலை அதே ஆற்றைக் கடந்து செல்வதற்காக பயன்படும் தெப்பம். தெப்பத்தின் வடிவத்தில் கரையோரம் முதலை ஒதுங்கிக் கிடப்பதைப் பார்த்துவிட்டு, அதைத் தெப்பமென எண்ணி அதிலேறி ஆற்றைக் கடந்துபோக முடியுமா? அதுபோல அற்பமான ஆசைகள் நிரம்பிய மனத்துடன் திரிபவர்கள் எவ்வளவு அலைந்தாலும் உண்மையை அறிந்துவிட முடியுமா?

மிக எளிமையான தோற்றத்துடன் காணப்பட்டாலும் ஒவ்வொரு வெண்பாவும் நுட்பமான பொருளைச் சுட்டும்வண்ணம் விரிவோடும் ஆழத்தோடும் இருப்பதைப் பார்க்க மகிழ்ச்சியாக இருந்தது. ஆன்மிகக் கருத்துகளில் எவ்விதமான பெரிய நாட்டமும் எனக்கு இல்லை. ஆனால், அந்த மாபெரும் கடலை நோக்கிச் செலுத்தும் வகையில் ஒவ்வொரு வெண்பாவும் அமைந்திருப்பதை என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

**வாக்குமனம் எட்டாத வாய்மையறி வானந்தச்**
**சூக்குமமே எண்ணாது தூலமாம் - யாக்கைத்**

*தொழிலுக் குழைத்தல் துலாமிதித்துத் தண்ணீர்*
*விழலுக் கிறைத்து விடல்*

*இந்த வெண்பாவின் உவமையை ஒரு காட்சியாக என் மனத்தில் விரிவாக்கிப் பார்க்க முடிகிறது. ஒரு பெரிய கிணறு. அதில் இயங்கும் ஒரு ஏற்றம். அதிகாலையிலிருந்து அந்த ஏற்றத்தில் ஏறி ஒருவன் தண்ணீர் இறைத்தபடி இருக்கிறான். அவ்வளவு துன்பப்பட்டு, அவன் இறைக்கும் தண்ணீர் வாய்க்கால் வழியாக ஓடுகிறது. அது நெல்வயல் நோக்கி ஓடவில்லை. விழல் விளைந்த இடத்தை நோக்கி ஓடுகிறது. நாம் இறைக்கும் நீர் எங்கே செல்கிறது என்கிற புரிதல்கூட இல்லாமல், நாள் முழுதும் ஏற்றம் இறைத்தபடி இருப்பவனைப் பற்றி என்ன சொல்வது? உண்மை எது என உணராதவன் பக்திக்கு அந்த உவமையைச் சொல்கிறது வெண்பா.*

*அகந்தை சட்டென ஒட்டிக் கொள்ளும் தன்மை உடையது. ஒருமுறை ஒட்டிக் கொண்டதை உதிர்ப்பது மிகவும் அரிது. மாபெரும் மனிதர்கள் என பெயரெடுத்த மனிதர்களிடம்கூட அகந்தை ஒட்டிக் கொண்டிருக்கும். அந்த அகந்தையை அகற்றுவதுதான் உலகிலேயே அரிதான செயல் என்றொரு கருத்தை முன்வைக்கிறது ஒரு வெண்பா.*

*ஊன வகந்தை ஒழித்தவுர வோனமெய்*
*யானதுற வோன்மறையோ னாயிடினும் - மானத்*
*துறவோர் மறையோர் சுமக்கும் அகந்தை*
*அறவோய்தல் அம்மா அரிது*

*அரிது அரிது மானிடராகப் பிறத்தல் அரிது என்ற ஔவையின் வரி நினைவுக்கு வந்தது. அந்த மானிடருக்குள் துறவோராகவும் மறை யோராகவும் உயர்ந்த நிலையை எய்துவது அரிது. அத்தகையோரிடம்கூட சிற்சில சமயங்களில் ‘நான் துறவி, நான் மறையோன்’ என்ற எண்ணம் குடியேறி அகந்தைக்குக் காரணமாக மாறிவிடும். அந்த*

*அகந்தையின் தடத்தை அறவே அழித்தல் அரிது என்கிறது வெண்பா.*

*புத்தகத்தைப் புரட்டப்புரட்ட பல நல்ல வெண்பாக்கள் பார்வையில் பட்டபடி இருந்தன. ஒன்றையொன்று விஞ்சி நிற்கும் வகையிலேயே இருந்தன. சட்டென ஒரு பக்கத்தில் ஒரு காட்சியையே உவமையாகக் கையாண்டிருந்த ஒரு வெண்பாவைப் பார்த்தேன். படித்த கணத்திலேயே மனத்தில் பதிந்தது. அவ்வெண்பாவில் கவிஞர் ஒரு புதிய சொல்லையும் உருவாக்கியிருந்தார். புகைவண்டி என்பதை பொங்கழலின் வண்டி என்று குறிப்பிடுகிறார். அழல் என்பது நெருப்பு. பொங்கும் நெருப்பின் உதவியால் எழும் நீராவியால் ஓடும் வண்டி என்ற பொருளைக் கொடுக்கும் வகையில் பொங்கழலின் வண்டி என்கிறார் கவிஞர். வெண்பாவுக்குள் அச்சொல் அழகாகப் பொருந்துகிறது.*

*அரும்பாரச் சுமைகள்நீ ராவிவளி யாலே*
*துரும்பாகக் கொண்டுநெடுந் தூரம் - விரைந்தோடும்*
*பொங்கழலின் வண்டியிலே போமறிஞர் தஞ்சுமையைத்*
*தங்கள்தலை மேல்சுமவார் தாம்*

*மனிதர்களையும் அவர்கள் எடுத்துச் செல்லும் சுமைகளையும் மற்ற சரக்குகளையும் சுமந்து கொண்டு நீராவியின் வலிமையால் புகைவண்டி ஓடிக் கொண்டே இருக்கிறது. புகைவண்டியில் பயணம் செய்யும் மனிதர்கள் யாரும் தம் சுமைகளை தம் தலைமேல் சுமந்தபடி செல்வதில்லை. அச்சுமைகளையும் சேர்த்து வண்டியே சுமந்துகொண்டு செல்கிறது. ஒரு வாகனம், ஒரு பயணம், ஒரு மனிதன், ஒரு சுமை என நான்கு புள்ளிகளிடையே உள்ள கோலமே இவ்வெண்பா. இந்த வாகனமே தன் பயணத்துககு உரிய வாகனம் என்று முடிவெடுத்து, வாகனத்தில் ஏறி பயணத்தைத் தொடங்கிய பிறகு, தன்னைப் பற்றிய கவலையோ அல்லது தன் சுமைகளைப் பற்றிய கவலையோ*

*சிறிதுமின்றி நிம்மதியாகப் பயணம் செய்யலாம். பயணத்தையும் தொடங்கிவிட்டு, சுமைகளைத் தலையிலிருந்து இறக்காமல் தன் தலையிலேயே வைத்திருக்கும் செயலை யாரும் செய்ய மாட்டார்கள். ஒருவேளை அப்படிச் செய்பவர்களின் பயணம் ஒரு வகையில் நிம்மதியிழந்த பயணமாகவே இருக்கும். வாகனம் என்று கவிஞர் குறிப்பிடுவது இறையருள், இறையருளே பெருந்துணை என எண்ணியபிறகு, மனத்திலிருக்கும் சுமைகளையெல்லாம் இறக்கி வத்துவிட்டு நிம்மதியாகப் பயணம் செய்வதே நல்லது. நம்மையே சுமையாகச் சுமக்கும் இறையருள், நம் சுமைகளையும் சேர்த்தே சுமக்கும். ஒரு நவீன வாகனப் பயணத்தை வெண்பாவுக்குள் ஓர் உவமையாகக் கையாண்டிருந்த விதம் புதுமையாக இருந்தது.*

*காட்சியை உவமையாகக் காட்டும் இன்னொரு வெண்பாவையும் பார்க்க முடிந்தது.*

*வறட்டெலும்பு கவ்வித்தன் வாய்நனிபுண் ணாகப்*
*பறட்டுப்பறட்டெ னத்தன் பல்லால் - தறித்துமகிழ்ந்து*
*என்புபோல் இன்சுவைவே றின்றெனவப் புண்ணீராற்*
*புன்புலநாய் போற்றும் புகழ்ந்து*

*பசிகொண்ட ஒரு நாய் வழியில் தனக்குக் கிடைத்த எலும்புத் துண்டொன்றைக் கவ்வியெடுத்துத் தின்னத் தொடங்குகிறது. வழித்தெடுத்துச் சுவைக்க, அந்த எலும்பில் ஒரு துண்டு தசைகூட இல்லை. வெறும் எலும்புத்துண்டு. பசி தாங்காத நாய், அந்தத் துண்டையே பறட்டுப் பறட்டென பல்லால் கடித்துச் சுவைக்க முயற்சி செய்கிறது. பல்லும் ஈறும் காயம் பட்டு ரத்தம் கசிகிறது. உமிழ்நீருடன் அந்த ரத்தமும் கசிகிறது. புண்ணிலிருந்து வடியும் அந்த நீரையே தனக்குக் கிட்டிய இரையென நினைத்துச் சுவைத்து மகிழ்கிறது நாய். பிறகு, இன்னும் ஒருபடி மேலே சென்று என்ன அருமையான சுவை என அந்தச் சுவையைப் பாராட்டவும்*

*செய்கிறது. வஞ்சகப்புகழ்ச்சியணி போல விரிகிறது வெண்பா. உவமையை மட்டும் முன்வைத்து விட்டு, உவமேயத்தைத் தவிர்த்திருக்கிறார் கவிஞர். இறைவனருள் என்னும் அருஞ்சுவை உணவை நாடாமல், தனக்குக் கிட்டியதெல்லாம் அருஞ்சுவை உணவென பிழையாக நினைத்து லயித்துக் கிடக்கும் செய்கையில் ஈடுபடுகிறவர்களை மறைமுகமாக அடையாளம் காட்டுகிறார்.*

*எது நல்ல நட்பு என்கிற இலக்கணத்தை ஒரு வெண்பா வரையறுத்துச் சொல்வதைப் பார்த்தபோது மகிழ்ச்சியாக இருந்தது.*

***சித்தங் கலங்கித் திருவாய் சளசளக்கும்***
***பித்தரினஞ் சேரிற் பிழைபலவாம் - செத்துமனம்***
***சுத்தமாம் மோனந் துலங்கப்பெற் றாருறவே***
***உத்தமநட் பாகும் உணர்***

*பயனற்ற வெற்றுப் பேச்சைப் பேசும் மனிதர்களின் நடவடிக்கையையும் நட்பையும் 'திருவாய் சளசளக்கும்' என கூர்மையான அங்கதம் தொனிக்க எழுதிச் சென்றிருக்கும் விதம் நன்றாக இருந்தது.*

***ஓட்டை யடைத்துள் ளுணர்வுதேக் காது***
***பூட்டை யுடைத்துப் பொறிவழிப் போக்கல்***
***கோட்டை யிடித்துக் குளநீரைப் போக்கி***
***நாட்டை யழிக்கும் நவைச்செய லாமே***

*ஒரு பாத்திரத்தில் நீரைச் சேமித்துவைக்க நினைப்பவர்கள் முதலில் அந்தப் பாத்திரத்தில் உள்ள ஓட்டையை அடைத்தபிறகே தண்ணீரை ஊற்ற வேண்டும். ஓட்டையை அடைக்காமல் எவ்வளவு தண்ணீரை ஊற்றினாலும் அந்தப் பாத்திரம் நிரம்பப் போவதில்லை. ஞானத்தைத் தேக்கிக் கொள்ளவும் இதுவே உகந்த வழியாகும். முதலில் உண்மையான உணர்வுகளைத் தேக்கிக் கொள்ளும்போது, அது ஞானமாகக் கனியும். ஐம்புலன்களுக்கும் உள்ள*

கட்டுப்பாடு என்னும் பூட்டுகளை உடைத்து, உணர்வுகளை வெளியே கசியவிடும்போது, நெஞ்சில் எதுவும் தங்காது. குளத்தின் கரைகளை உடைத்து, குளநீரையெல்லாம் வெளியேற வழிசெய்யும்போது, குளத்துடன் ஊரும் அழிந்துபோவதை யாராலும் தடுக்க முடியாது. குளத்தின் கரையைப் பாதுகாப்பதுபோல மனத்தின் கரையையும் பாதுகாத்து, உண்மைவழியில் நின்றுன் உணர்வுகளையும் பாதுகாக்க வேண்டும். ஞானத்தின் பாதை அப்போதுதான் புலனாகும்.

செத்தாலே வீட்டுலகஞ் சேரலாம் அன்றிமற்
றெத்தாலும் சேரல் இயையாதே - செத்தொழிகை
எவ்வதெனின் யானெனதை மாய்த்தலே அன்றிமற்
றிவ்வுடம்பை மாய்த்தல் இழுக்கு

ஒருமுறை படிக்கும்போதே இன்னொரு முறையும் படித்துவிட்டு அசைபோடவைக்கும் வெண்பா இது.

இருவித மரணங்களை முன்வைத்து, ஒரு கோணத்தில் நுட்பமாகவும் இன்னொரு கோணத்தில் வெளிப்படையாகவும் வீடுபேறு பற்றிப் பேசுகிறது வெண்பா. ஒன்று உயிரைத் துறக்கும் மரணம். இன்னொன்று யான், எனது என்னும் செருக்கைத் துறக்கும் மரணம். அகந்தையைத் துறப்பதுகூட ஒருவகையில் மரணமுற்று புதிதாகப் பிறத்தலே. வீடுபேறு என்பது உயிர் துறந்தபிறகு அடையத்தக்க ஒன்றல்ல. செருக்கைத் துறந்தவனுக்கு மட்டுமே அந்த வீடுபேறு சாத்தியம். ‘எத்தாலும் சேரல் இயையாதே’ என்னும் வரியில் தென்படும் தீர்மானமான அனுபவம் வெண்பாவை பலமடங்கு அழகுள்ளதாக ஆக்குகிறது.

ஆயிரத்துச் சொச்ச வெண்பாக்களில் இப்படி ஏராளமான வெண்பாக்கள் கண்ணில் பட்டபடி இருந்தன. விட்டுவிட்டு மூன்று நாட்களில் புத்தகத்தைப் படித்து முடித்தேன். தத்துவ பாரம் எதுவும் இல்லாமல் மிக எளிமையான உவமைகளையும்

*காட்சிகளையும் முன்வைத்து எழுதப்பட்டிருந்ததால், மிக எளிதில் உள்வாங்கிக் கொள்ள முடிந்தது. பல புதிய சொற் சேர்க்கைகளை மீண்டும் மீண்டும் அசைபோட்டபடி இருந்தேன். 1939-ஆம் ஆண்டில் இந்த வெண்பாக்கள் நூல்வடிவம் பெற்றிருக்கிறது என்னும் குறிப்பை வைத்துப் பார்க்கும்போது, அதற்கு இருபது முப்பது ஆண்டுகளுக்கு முன்பாகவே, இவை இயற்றப்பட்டிருக்கலாம். தோராயமாக ஒரு நூற்றாண்டைக் கடந்த வெண்பாக்கள் என்று தோன்றியது. அது ஒரு சிறப்பு. ரமணரே படித்துப் பார்த்து தத்துவ உட்பொருளைச் சரிபார்த்துக் கொடுத்திருக்கிறார் என்பது இன்னொரு சிறப்பு. ரமணர் படித்த வெண்பாக்கள் எனக்குப் படிக்கக் கிடைத்திருக்கின்றன என்று மனதுக்குள் உச்சரித்துக் கொள்ளும்போது ஒரு நெருக்கத்தை உணர முடிகிறது.*

*நேற்று ஞாயிறு அன்று மீண்டும் அந்தப் புத்தகக் கடைக்குச் சென்றிருந்தேன். “வாங்க சார், நேத்து ஒரு பெரிய கட்டு வந்து எறங்கியிருக்குது, பாருங்க” என்று அவற்றையெல்லாம் தூக்கி என் முன்னால் வைத்தார். புரட்டிப் பார்க்கத் தொடங்கிய என்னை இடைமறித்த நண்பர் ஏதோ நினைவு வந்தவராக, “போன வாரம் எடுத்துப் போனீங்களே, அந்த புத்தகத்த புடிக்கலைன்னா திருப்பிக் குடுத்துரலாம்” என்று சொன்னார். நான் புன்னகையோடு, “படிச்சிட்டேன், நானே வச்சிக்கிறேன்” என்றேன். அவரும் என்னைப் பார்த்து புன்னகைத்தார்.*

*[நன்றி: “உங்கள் நூலகம்” ஏப்ரல் 2015 இதழ் மற்றும் ஆசிரியர் திரு. பாவண்ணன்]*

# பகவான் பகர்ந்த தாலாட்டு கீதம்

## கௌதமன்

*37. அர்ஜுனன்:*

*அபிமானம் வரும்வகையும் ஆங்குஅதனைத் தீர்வகையும்*
*தபியாமல் நான்அறியத் தயவாகக் கூறும்என*

*பொருள்: எப்படி ஒருவனுக்கு பற்று அல்லது தன்முனைப்பு வந்து சேர்கிறது என்பதையும், அதனை எப்படி நீக்குவது? நான் குழம்பாமல் தெளிவாக அறிய அருள்கூர்ந்து கூறுங்கள்.*

*38. கண்ணன்:*

*மறந்திடும் அஞ்ஞானம்தான் மானம்வந்தது அஞ்ஞானம்*
*இறந்துவிடின் மானமும் போமென்னஉரை செய்தவரோ*

*தன்னுடைய ஸ்வரூபமான ஆத்மாவை மறந்ததால் தேகாபிமானம் வந்தது. (நான் யார் என்ற உள்முக நோக்கால் விசாரித்து அறிய) அவ்வபிமானம் முற்றிலும் நீங்கிவிடும்.*

*[ஒப்பு: ப்ரமாதம்வை ம்ருத்யுரஹம் ப்ரவீமி ।*

*ஸதா அப்ரமம் அம்ருதத்வம் ப்ரவீமி ॥ ஸநத்ஸு ஜாதயம்*

*தன்னை மறத்தலே மரணம். தான் என்பதை மெய்யாக நினைவுகூரலே மரணமின்மை]*

*39. அர்ஜுனன்:*

*அந்தமுறை அஞ்ஞானம் அணுகுவம் போவதுவும்*
*சந்தயம் இல்லாதுஅறியத் தயவாகக் கூறும்என*

*பொருள்: அஞ்ஞானம் வருவதற்கான காரணத்தையும் எங்ஙனம் அது மறைகின்றது என்பதையும் ஐயம் அற விளக்குவீராக!*



*40. கண்ணன்:*

*அஞ்ஞானம் வந்தது அனாதிஅது சொல்வதல்ல*
*மெய்ஞ்ஞானத் தாலே விடும்என்று உரைத்தவரோ*

*பொருள்: அஞ்ஞானம் எந்த ஒரு காரணத்தால் வந்துற்றது என்று சொல்ல முடியாது. அது அநாதியாகும். ஆயினும் மெய்ஞ்ஞானம் அடையும்போது அஞ்ஞானம் முற்றிலும் நீங்கிவிடும்.*

*41. அர்ஜுனன்:*

*இரவிஎதிர் அடுத்துவந்த இருள்போல அஞ்ஞானம்*
*வரவிதியோ சோதிதன்பால் வந்தவகை ஏதெனவே*

*பொருள்: சூரியனுக்கு அடுத்துவந்த காரிருள்போல சுயம்பிரகாசமான ஆத்மாவின்முன் அஞ்ஞானம் வரமுடியுமா? அப்படி இருந்தும், 'நான் அஞ்ஞானி' என்ற எண்ணம் தோன்றக் காரணம் என்ன?*

*42. கண்ணன்:*

*அந்த அறிவுவந்தால் அஞ்ஞானம் இல்லைஅப்பால்*
*சந்ததமும் ஆனந்த சாகரம்காண் என்றவரோ*

*பொருள்: நான் சுயம்பிரகாசமான ஆத்மா என்றும் ஞானம் உனக்கு உதயமானால் அப்போதே அஞ்ஞானம் உன்னைவிட்டு நீங்கும். அதற்குப்பின் நீ சதாகாலமும், ஆனந்தப் பெருங்கடலாகவே இருப்பாய்.*

**43. அர்ஜுனன்:**

*வேதாந்தத்தால் குருவால் மெய்ஞ்ஞானம் வந்தவுடன்*
*தீதான துக்கசுகம் தீராதது ஏதுஎனவே*

*பொருள்: வேதாந்த நூல்களின் சிரவணத்தாலும் பயிற்சியினாலும், சத்குருவின் உபதேசத்தாலும் மெய்ஞ்ஞானம் வந்த அக்கணமே, கொடியதான சுக துக்கங்கள் உடனே நீங்காதது ஏன்?*

**44. கண்ணன்:**

*பற்றுஅறுமோ துக்கசுகம் பரோக்ஷ ஞானத்தாலே*
*அற்றமாம் அவ்விரண்டும் அபரோக்ஷத்து என்றவரோ*

*பொருள்: சுகதுக்கங்களாகிய இப்பந்தங்கள், ப்ரத்யட்ச அனுபவமில்லாத பரோக்ஷ அறிவினால் அறுபடுமோ? (அறுபடாதது). இவ்விரண்டும், ப்ரத்யக்ஷ அனுபவ ஞானமாகிய அபரோக்ஷ ஞானத்தால் மட்டுமே அறுபடும்.*

*(பரோக்ஷம்: நூலறிவு, அபரோக்ஷம்: ஆத்மிக அநுபவ அறிவு, வாலறிவு)*

**45. அர்ஜுனன்:**

*பரோக்ஷம்அபரோக்ஷம்எது பகுத்து உரைக்க வேண்டும்என்தன்*
*திரோதமாம் புத்திநன்றாய்த் தெளியும் படிக்கெனவே*

*பொருள்: பரோட்ச அறிவு என்றால் என்ன? அபரோக்ஷ ஞானம் என்றால் என்ன என்பதை, அஞ்ஞானத்தால் மறைக்கப்பட்ட எனது புத்தி நன்றாகத் தெளிவு பெறுமாறு பிரித்துக் கூறவேண்டும்.*

**46. கண்ணன்:**

*பகர்ந்தஅசத் அஞ்ஞானம் பரோக்ஷம் அனுபவத்தால்*
*அகம்பிரமம் எனுஞானம் அபரோக்ஷம் என்றவரோ*

*பொருள்: வெறும் நூல்படிப்பைக் கொண்டுமட்டுமே அறியப்படும் சிற்றறிவு பரோக்ஷ ஞானம் எனப்படும். ஆத்ம அனுபவத்தால் 'நானே பிரம்மம்' என்று அடையப்பெறும் ஞானம் அபரோக்ஷ ஞானம்.*

*47. அர்ஜுனன்:*

*தான்பிரமம் என்றறிந்தும் தனுவைத்தான் என்றபுத்தி*
*ஏன்போக வில்லைஅதை எனக்குஅறியப் புகலும்என*

*பொருள்: 'அஹம் ப்ரம்மாஸ்மி', நானே அந்தப் பிரம்மம் என்று அறிந்த பின்னும், தேஹ இந்திரியங்களையே நான் என்று தவறாக என்னும் புத்தி ஏன் நீங்கவில்லை? அதை அடியேனுக்கு விளங்குமாறு கூறி அருளுக!*

*48. கண்ணன்:*

*கேள்வியினால் மனனத்தால் கிளர்ந்த யோகங்களினால்*
*ஆள்பிரமத்து அனுபவம் வந்ததுதீரும என்றவரோ*

*பொருள்: (ஸத்குருவின் உபதேசத்தினை இடையறாது கேட்கும்) சிரவணத்தினாலும், அதையே மனத்தில் எண்ணித் தியானிக்கும் மனனத்தினாலும், விளங்குகின்ற தியான யோகங்களினாலும் முயன்று அடையத் தக்க பிரம்ம அனுபவம் உதயமான பின் 'நான் தேஹம்' என்னும் தவறான கருத்து நீங்கும்.*

*49. அர்ஜுனன்:*

*ஆதியாம் சிற்சொரூபம் ஆகாததுதான் இனிமேல்*
*சோதி மனனாதியினால் சொரூபம் ஆமோஎனவே*

*பொருள்: ஆதியிலிருந்தே சித்ஸ்வரூபமாக இல்லாதிருந்த ஆத்மா, பின்னர், விசாரம் மற்றும் மனனம், யோகம் இவற்றைப் பின்பற்றும்போது, சின்மாத்ர (பரமாத்ம) ஸ்வரூபமாய் ஆகிவிடுமோ என்று கேட்டான்.*

*50. எப்போதும் சின்மயம் தான்எனல்மறந்து தேடுவது*
*செப்புமிடத்து அணியிருக்கத் தேடுதல்போல் என்றவரோ*

*பொருள்: 'நான் ஆத்ம ஞானத்தை அடையவேண்டும்' என்று தேடுவது, தனது கழுத்திலேயே கழுத்துநகை இருக்கும்போது, அது எங்கே என்று தேடுவதை ஒப்பதாகும்.*

*[நாம் எப்போதும் ஆத்மஸ்வரூபமே; புதிதாக அடைவதற்கு ஒன்றுமே இல்லை என்பது பகவான் வாக்கு.]*

*(பின்வரும் மூன்று பாடல்களும் அர்ஜுனன் கேட்கும் சந்தேகங்கள்)*

***51. அர்ஜுனன்:***

*தேடியபின் தேகபுத்தி தீர்ந்துபோய்ச் சிற்சொரூபம்*
*கூடுவனோ யான்என் குறைதீரச் சொல்லும்என*

*பொருள்: (முன்னே குறிப்பிட்ட) ஸ்ரவண, மனன, தியான விசாரப் பயிற்சிகளால் ஆராய்ந்தபோது, 'நான் தேகம்' என்ற தவறான எண்ணம் அழிந்துபோய், எனது சித்ஸ்வரூபமான உண்மையை நான் நிச்சயம் அறிவேனோ? எனது குறை நீங்கும்படி கூறி அருளுவீர்.*

***52. (தொடர்ச்சி)***

*வந்தஉடல் வேறாயும் வாசனையால் தான்எனலால்*
*சந்தயம்என் தற்சொரூபம் தானாதற்கு என்றவரோ*

*பொருள்: நாம் எடுத்துவந்த இந்த உடல் நமது பிராரப்த கர்மத்தின் விளைவாய் வந்தது. அது ஆத்மாவல்ல. ஆயினும், பல்வேறு பிறவிகளில் தொடர்ந்துவந்த, வாஸனையின் தாக்கத்தால் 'தேஹமே நான்' என்னும் தவறான எண்ணம் தொடர்ந்து இருக்கிறது. இதுவே 'நான் உண்மையில் பிரம்ம ஸ்வரூபம்தான்' என்னும் உண்மைக்குத் தடையாக உள்ளது என்று கூறுகிறீர்களா!*

*(தொடர்ச்சி)*

***53.** தனுவைத்தான் என்னும்பிரமை சத்த*
*ஞானத்தில்அறாது*
*அனுபவமெய்ஞ் ஞானத்தால் அறும்வகைஏது*
*உரையுமென*

*பொருள்: தேகத்தையே தான் என்று எண்ணும் பிரமை, வெறும் சாஸ்திர அறிவாகிய பரோக்ஷ*

ஞானத்தால் நீங்காது. யதார்த்த அனுபவமாகிய அபரோக்ஷ ஞானத்தால் அது எங்ஙனம் நீங்கும் என்பதைக் கூறுவீராக (என அர்ஜுனன் கேட்கிறான்).

*54. கண்ணன்:*

*விளக்குவிளக்கு எனும்அதனால் வெய்யஇருள் போய்விடுமோ*

*துளக்கமிலா விளக்குஏற்றித் தொலையும்இருள் என்றவரோ*

பொருள்: 'விளக்கு விளக்கு' என்று வாயால் பலதரம் சொல்லிக்கொண்டே இருந்தால் அந்த அந்தகாரமாகிய இருள் நீங்கிவிடுமோ? (நீங்காது). சலனம் இல்லாது ஒரு தீபத்தை ஏற்றிவைத்தால் அந்தக் காரிருள் நீங்கும். (அதுபோல வெறும் சாஸ்திர ஞானத்தால் அஞ்ஞான இருள் நீங்காது. அபரோக்ஷ ஞானமாகிய அனுபவ ஞானத்தால் மட்டுமே அறியாமை நீங்கும்).

*55. அர்ஜுனன்:*

*நெடுங்காலம் ஆன்மாவை நீங்காத அஞ்ஞானம்*

*விடும்காலம் எந்நாளோ மெய்ஞ்ஞானத்தால் எனவே*

பொருள்: நீண்டகாலமாக ஆத்மாவை மறைத்துநின்ற அஞ்ஞானமானது மெய்ஞ்ஞானம் உதித்து அதனால் நீக்கப்படும் காலம் எக்காலமோ?

*56. கண்ணன்:*

*அந்தகாரம் குகையில் ஆயிரம்நாள் இருந்தாலும்*

*செந்தீபம் கண்டவுடன் தீர்வதுபோல் என்றவரோ*

பொருள்: இருளானது மலைக்குகையில் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகப் பரவி இருந்தாலும், செம்மையான தீபத்தைக் கண்டவுடன் நீங்குவதுபோல (பலகாலம் ஆத்மாவை மறைத்து இருந்தாலும் மெய்ஞ்ஞானம் உதயமாகும்போது, அஞ்ஞான இருள் உடனே நீங்கிவிடும்).

# நான் யார் தெரியுமாவிலிருந்து நான் யார் வரை

## டாக்டர் ஏ.வி. ராஜகோபாலன்

பகுதி-22

சம்சார சாகரம் என்று இவ்வாழ்வைக் குறிப்பிடுகிறோம். சாகரம் என்றால் கடல். அதில் அலைகள் எப்பொழுதும் ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கின்றன. அலை ஓய்ந்த பின் குளிக்கலாம் என்று காத்திருந்தால் அது என்றுமே சாத்தியமல்ல. அலைகளைச் சமாளித்து நீராடுபவனே வெற்றி பெறுவான். ஆனால் அலைகள் கடலோரத்தில்தான் காணப்படுகின்றன. நடுக்கடலில் அலைகள் இருப்பதில்லை. ஆனால் அங்கு ஆழம் அதிகம். நீச்சல் பயிற்சி பெற்றவர்களே அங்குச் செல்ல இயலும். எல்லோருக்கும் அது இயலாது. ஆகையால் திறமை மிக்கவர்கள் நடுக்கடலில் சென்று குளிக்கலாம் ஏனையோர் அலைகளை சமாளித்து அவை வந்து தாக்கும் கரையின் அருகில் இருந்து கொண்டே நீராட வேண்டும்.

ஆனால் குளிக்கக் கடலுக்குத்தான் போக வேண்டுமா? கங்கையும் காவிரியும் நீராட ஏற்ற தீர்த்தங்கள் அல்லவா? அங்கு அலைகள் கிடையாது. உப்பு நீரும் இல்லை. மேலும் அவை புண்ணிய நதிகள் என்று போற்றப்படுபவைகள். கடலாம் சம்சார சாகரத்தை விட்டு விலகி, இந்த நதிகளை நாடுபவன் இப்பிறவியிலும் மறு பிறவியிலும் நல்ல பேற்றைப் பெறுகிறான். ஆனால் நாம் இப்பிறவிப் பெரும் கடலை விட்டு விலகி நல்ல இடங்களை நாடிச்செல்லும்

ஞானம் பெறாதவர்கள். உப்பு நீரும் ஆர்ப்பரிக்கும் அலைகளுமே நாம் அறிந்தவை. இன்னிலையிலிருந்து விலகி இறைவனடியை நாடும் சான்றோரின் பாதங்களைப் பற்ற விரும்புகிறார் திருவாதவூரில் பிறந்த மாணிக்கவாசகர். முதலில் நம் நிலையை நாம் தெளிவுபட உணர, அவர் உரைக்கிறார்.

*மால் அது ஆகி மயக்கம் எய்தியும்*
*பூதலம் அதனில் புரண்டு வீழ்ந்து அலறியும்*
*கால் விசைத்து ஓடி கடல்புக மண்டி*

*- (கீர்த்தித் திருவகவல் 133-135)*

வாழ்க்கையில் விழுந்து புரண்டு பெருந்துன்பப்பட்டு இறுதியில் நல்வினை காரணமாக அவன் வயப்படுகிறோம். அவன் நாமம் ஓதி அவன் திருவடியை எய்துகிறோம். மணிவாசகர் எளிய வரிகளில் இதை விளக்குகிறார்.

*'நாத! நாத' என்று அழுது அரற்றி*
*பாதம் எய்தினர் பாதம் எய்தவும்*

*- (கீர்த்தித் திருவகவல் 136-137)*

இறைவன் நாமத்தை ஓதி அழுது புரண்டு, அவன் அடியை அடைந்த சிவனடியார்கள் பாதம் எய்த விழைகிறார் இந்த எளியவர். இது சைவ சமயத்தில் ஒரு சீரிய கோட்பாடு. அடியார்கள் ஆண்டவனை ஒத்தவர்கள் என்பது நாயன்மார்கள் வரலாற்றைப் படித்தால் நன்கு விளங்கும். இவர்தம் புகழ் பாடத் துவங்கும் பொழுதில் முதல் வரியிலேயே, சுந்தரப் பெருமான், தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன் என்று திருத்தொண்டத்தொகையை ஆரம்பிக்கிறார். இந்த அடியார்கள்தான் எத்தனை மகிமை படைத்தவர்கள், எத்தனை தியாக உணர்வு கொண்டவர்கள்? இயற்பகை நாயனார் தன் துணைவியையே அளிக்கிறார். பல்லவ சேனாபதியாகக் களத்தில் போர் பல கண்டு வெற்றி வாகை சூடிப் பின்னர் சிவன்பால் மனத்தைப் பொருத்திய சிறுத்தொண்டர் தன் ஒரே மகனை,

*தாய் மடியில் கிடத்தித் தன் கையாலேயே வெட்டி பிள்ளைக் கறி அளிக்கத் தயங்குவதில்லை. கண்ணப்பர் தன் கண்களையே அளிக்கத் தயாராகிறார். இவ்வாறு ஆண்டவனுக்கும் அடியாருக்கும் இடையே பெரும் பிணைப்பு ஏற்படுகிறது. இந்த எளியோரின் பெருமையை உலகம் அறிய இறைவனும் பல திருவிளையாடல்களைச் செய்கிறான். மதுரையிலும் ஆரூரிலும் நடையாய் நடக்கிறான். பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படி பெறுகிறான். அதே சமயம் அன்னாருக்குப் பல இன்னல்களையும் தருகிறான். அதில் அவர்கள் வெற்றி பெற்று புடம் போட்ட தங்கமாய் சொலிக்க, அவர்களுக்கு இம்மையிலேயே இறைக்கோலத்தைக் காணும் வாய்ப்பையும் நல்குகிறான்.*

*ஆனால் இப்பேறு அனைவருக்கும் கிட்டுவதில்லை. ஆயின் இப்பொழுது ஒரு கேள்வி எழுகிறது. இந்த நல்வினை எதனால் அமைகிறது? நம் திறமையாலோ, மதி நுட்பத்தாலோ அல்ல. அனைத்தும் பரமேசுவரன் கிருபையாலேதான் சித்திக்கிறது. எப்பெரும் தன்மையும் எவ்வெவர் திறமும், அப்பரிசு அதனால் ஆண்டு கொண்டருளி என்ற வரிகளில் இதைத் தெளிவு படுத்துவார் வாதவூரார். அந்த அருளே நமக்கு வழிகாட்டி. ஆனால் அதற்கு நம்முடைய செயல்பாடுகளும் காரணமாக அமைகின்றன. ஒரு பிறவியில் நற்செயல்கள் சில புரிந்த சாதகன் பரிபூரண முக்தாத்மாவாக ஆகாத நிலையில் என்ன கதியை அடைகிறான் என்ற கேள்வி எழுகிறது. இதற்கு தேர்த்தட்டில் அமர்ந்து உபதேசித்த கண்ணன் வழி காட்டுகிறான்.*

*ப்ராப்ய புண்யக்ருதான்லோகான் உஷித்வா சாஸ்வதீசமா:*
*சுசீனாம் ரீமதாம் கேஹே யோகப்ரஷ்டோபிஜாயதே*

*மண்ணுலகத்தில் பல புண்ணிய செயல்கள் புரிந்தும் முக்தி நிலையை எய்தாத சாதகன் யோகப்ரஷ்டன் எனப்படுகிறான். அவன் பின்வரும் பிறவிகளில்*

*நற்குலத்தில் பிறந்து இறுதியில் இறைவனடி சேருகிறான். இவ்வாறு உயர் நிலையை அடைந்த இந்த பக்தன் பரமனுக்கு சிறந்த நண்பனாகி, இறைவனோடு நெருங்கிப் பேசிப் பழகத் தொடங்குகிறான். உரிமையோடு ஆணையிடுகிறான்.*

*இதற்கு ஒரு உதாரணம் திருமழிசை ஆழ்வார். இவர் பக்தர்களுள் சிறந்தவர். இவர் திருக்குடந்தை என்னும் தலத்தை அடைகிறார். இதுவே இன்னாளில் கும்பகோணம் என அழைக்கப் படுகிறது. அங்கு சயன திருக்கோலத்தில் இருக்கும் பெருமாளைக் காணுகின்றார். 'என்னைக் கண்டும் அமர்ந்த கோலத்தில் என்னுடன் பேச விழையாமல் படுத்துக்கிடக்கிறீரே, என்ன காரணம்? ராமாவதாரத்தில் வனவாசம் செய்ததால் கால்கள் நொந்ததோ கேசவா?' என்று உரிமையுடன் கேட்க, பெருமானும் பாதி எழுந்த திருக்கோலத்தில் அவருடன் சம்பாஷிக்கிறான். இன்றும் அதே திருக்கோலத்தில் காட்சி அளிக்கிறான்.*

*நடந்த கால்கள் நொந்தவோ? நடுங்க ஞாலம் ஏனமாய்*
*இடந்த மெய் குலுங்கவோ? இலங்கு மால் வரைச்சுரம்*
*கடந்த கால் பரந்த காவிரிக் கரைக் குடந்தையுள்*
*கிடந்தவாறு எழுந்திருந்து பேசு; வாழி கேசனே*

*- (திருச்சந்த விருத்தம்)*

*என்ன உரிமை பக்தனுக்கு! இங்கு ஆழ்வார் பிரானாகவும் ஆண்டவன் ஆழ்வானாகவும் ஆகின்றனர் என்பது பூர்வர்களின் அநுபவம்.*

*ஆனால் இது சுலபமாக அடையக்கூடியதல்ல. உலக வாழ்வில் பற்றுகளைத் துறத்தல் எளிதன்று. ஆசை என்பது பலவந்தமாக நம்மை இழுத்துச் செல்லும் ஒரு வலை. இதன் பிடியிலிருந்து விடுபடுவது என்பது நம் அனைவருக்கும் பெரியதோர் சவாலாக அமைகிறது. சம்சாரத்தில் நம்மை மீண்டும் மீண்டும் ஆழ்த்தும் தன்மை படைத்தது. இதையே திருமூலர் 'பாடொன்று*

பாசம்' என்ற பாடலில் சொல்லுவார். இதன் பொருள் துன்பம் தரும் பாசம் என்பதாகும். 'ஆசை நிறைவேறாவிடில் துக்கம்; ஆசை நிறைவேறினால் கூட துக்கம்' என்னும் விசித்திர பந்தத்தால் நாம் கட்டுறப் பட்டுள்ளோம். இதுவே உலக வாழ்க்கை துன்பம் நிறைந்ததாக இருக்கக் காரணம். ஆதிசங்கரரும் இதை நமக்கு வலியுறுத்தி, பந்தங்களிலிருந்து விடுபட அருள்மிகு பராசக்தியின் பாதங்களே துணை என்பர்.

*ந தாதோ ந மாதா ந பந்துர் ந ப்ராதா*
*ந புத்ரோ ந புத்ரீ ந ப்ருத்யோ ந பர்தா*
*ந ஜாயா ந வித்யா ந வ்ரித்திர் மமைவ*
*கதிஸ்த்வம் கதிஸ்த்வம் த்வமேகா பவானீ*

பகவத்பாதர் பவானித் தாயாரிடம் விண்ணப்பிக் கிறார். 'தாயே, எனக்கு தந்தையோ தாயோ, உறவினர்களோ, உடன் பிறப்புகளோ, புதல்வர்களோ அடைக்கலமாக மாட்டார்கள். சேவகர்களோ, எஜமானனோ கதியில்லை. என் படிப்பும் தொழிலும் உதவிக்கு வராது. பவானீ மாதா, நீயே கதி, நீ ஒருத்தியே எனக்கு கதி.'

வைணவ சித்தாந்தத்திலும் ரஹஸ்ய த்ரயத்தில் இதுவே சரம ஸ்லோகமாக ஆளப்படுகிறது. 'எல்லா அறமும் நீக்கி என்னையே அடை.' இதுவே வேதாந்த-பக்தி மார்க்கங்களின் ஒன்று சேரும் இடம். பந்தங்களிலிருந்து விடுபடுவதே முக்திக்கு வழி. இதுவே நான் நீங்கிய நிலை; என்னால் முடியும் என்னும் அகங்காரம் நீங்கிய ஞானியின் உள்ளம்.

ஆண்டாள் பாசுரம் ஒன்றில் இது அழகாகக் காணக் கிடைக்கிறது. ஆயர்பாடியில் வசிக்கும் ஐந்து லட்சம் குடிப் பெண்கள் மார்கழி மாதத்தில் நோன்பு நோற்று, இறைவனைத் தொழுது அவனருளால் பறை பெறுவோம் என்று நிச்சயிக்கின்றனர். அதன் பொருட்டு வைகறைப் போதில் அனைத்துப் பெண்டிரையும்

*எழுப்பக் கூட்டாகக் கிளம்பும் அந்த இடைப் பெண்டிர் ஒரு பெண்ணின் அகத்திற்குச் செல்லுகின்றனர். அவள் இன்னும் உறக்கத்தில் இருக்கிறாள். அவளை எழுப்ப அவர்கள் பாடும் பாசுரம் நோக்கத் தக்கது. நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய் என்னும் அந்தத் திருப்பாவை வரிகளில், உரையாசிரியர்கள் சுவையான ஒரு சித்தாந்த விளக்கம் நல்குகிறார்கள். பாவை நோன்பு இனிமேல்தான் துவங்க இருக்கிறது. அதன் பின்புதான் சுவர்க்கம் என்னும் பலன் கிட்டும். அதற்கு முன்பே ஒரு பெண் எவ்வாறு சுவர்க்கம் புகுவாள் என்னும் வினா எழுகிறது. அதற்கு விடை, அந்த பாகவதப் பெண் நோன்பு, பக்தி போன்ற உபாயங்களைக் கைக்கொள்ளாமல், இறைவனையே உபாயமாகக் கொண்டு சரணடைகிறாள். அதனால் நோன்பு போன்ற கிரியைகளின் உதவி இன்றியே அவள் இறையடியைப் பெறுகிறாள். இந்தச் செயல்களைச் செய்யும் பிரவிருத்தி மார்கத்தை விட செயலாற்றாமை என்னும் நிவிருத்தி மார்க்கமே உயர்ந்த சரணாகதி நிலை.*

*இந்த உலக பந்தங்களின் பிடியினின்றும் விடுபட அவன் அருள் தேவைப்படுகிறது. 'சிவனவன் என் சிந்தையுள் நின்ற அதனால் ... ...' என்ற சிவ புராணத்து வரிகள் சில உண்மைகளைப் புலப்படுத்தும். சிவனவன் சிந்தை எனக்குள்ளே இருத்தல் என்பதில், நம் செயல் வெளிப்படுகிறது. அவனை உள்ளே தியானித்து அவனை நம் வசப்படுத்துதல் நம் கரும வினைகளால் அமையும். ஆனால் அவனருள் பெறவும் அவன் அருள் தேவை என்பது தர்க்கத்துக்கு அப்பாற்பட்ட ஆன்மீக நிலை.இதை நாம் அனுபவத்தால் உணர இயலும். பக்தனை அவனே தேர்ந்து எடுக்கிறான் என்பது மணிவாசகர் கண்ட உண்மை. 'புழுத்தலைப் புலையனேன் தனக்கு செம்மையேயாய சிவ பதம் அளித்த செல்வமே' என்று அவர் உரைக்கிறார். நம்மாழ்வாரும் இதையே 'ஆம் முதல்வன் இவன் என்று தன் தேற்றி' என்ற*

*பாடலில் விளக்குவார். சைவமும் வைணவமும் கண்ட பேருண்மை இதுவே. இறைவன் அடி பணிய, நம் முயற்சியுடன் அவன் திருவருளும் தேவை.*

*இந்த நிலை மிகச்சிலருக்கே கிட்டுகிறது. மற்றவர் தத்தம் பாங்குக்கேற்ப வழிபாடுகளைச் செய்வர். இதைத் திருமூலர் விளக்குகிறார்.*

***கிரியை யோகங்கள், கிளர்ஞான பூசை***
***அரிய சிவனுரு அமரும் அரூபம்***
***தெரியும் பருவத்துத் தேர்ந்திடும் பூசை***
***உரியன நேயத்து உயர் பூசையாமே. (திருமந்திரம் - 1448)***

*'பருவத்துத் தேர்ந்திடும்' என்ற சொல்லால் சாதகர்கள் தத்தம் மனோபாவத்திற்கு ஏற்ப உருவ-அருவ வழிபாட்டை ஏற்றுக் கொள்ளுவர். இதையெல்லாவற்றையுமே உயர்ந்த பூசையாகவே கருதுகிறார், திருமூலர். சகுண உபாசனையே நிர்குண உபாசனையையும் தருகிறது. ஸ்வாமி சித்பவானந்தர், இதை அழகுபட ஓர் உதாரணத்தின் மூலம் விளக்குகிறார். சிதம்பரத்தில் முதலில் நடராசனின் ஆனந்த நடனத்தைக் காண்கிறோம். பல தத்துவங்களை விளக்கும் தில்லைக் கூத்தனின் உருவமே ஒரு வேதாந்தக் கருவூலம். இந்த சகுண உபாசனைக்குப் பின்னர் உருவற்ற அவன் அண்டவெளியை 'ரகசியம்' என்று பார்க்கும் பேறு கிட்டுகிறது.*

*ஆத்ம சாதகன் சத்துவ குணத்தில் நிலை பெற்றிருக்கும் பொழுது சகுண பிரம்மத்தின் காட்சி கிட்டுகிறது.... நிர்க்குண பிரம்மமே சிதம்பர ரகசியம் எனப் படுகிறது. சகுண பிரம்மத்தின் அருளால், அதாவது நடராஜாவின் அருளால் நிர்க்குண பிரம்மம் அடையப் பெறுகிறது.*

*(திருவாசகம், ஸ்வாமி சித்பவானந்தர், ஸ்ரீராமகிருஷ்ண தபோவனம், ப. 178)*

*சகுண-நிர்குண உபாசனா முறைகளில் ‘இது உயர்ந்தது. இது தாழ்ந்தது’ என்று தராதரம் கிடையாது. சித்தத்தை இறைவன்பால் வைத்தலே ஆன்மீகத்தின் முடிவான குறிக்கோள்.*

*தன்னை அண்டும் பக்தருக்கு ஆண்டவனும் எல்லாவித நலனையும் அளிக்கக் காத்து நிற்கின்றான். பாண்டிய நாட்டு வைணவத்தலங்களில் திருக்கோளூரும் ஒன்று. இந்த திவ்யதேசத்தின் ஆண்டவனை நம்மாழ்வார் துதித்துப் பாடினார். அவனை அவர் வைத்த மாநிதியாம் மதுசூதனையே... என்று விளித்துப் பாட, அந்த ஆண்டவனுக்கு அப்பெயரே நிலைத்து விட்டது. இதில் ‘வைத்த’ என்னும் சொல்லுக்கு தன் அருளை எப்பொழுதும் அன்பர்களுக்குத் தேவைப்படும்படி தயாராக வைத்திருப்பவன் என்று பொருள் கொள்ளப்படுகிறது. இதை விரிவுபடுத்தி (இறந்த - நிகழ் - எதிர் காலங்கள் என்னும்) முக்காலத்திற்கும் பயன் கொடுக்கும் வினைத்தொகை சொல்லாகவும் பொருள் கொள்ளலாம். நாம் அனுபவித்தவை எல்லாம் அவன் அருளால் கிடைத்தவை. நாம் இப்பொழுது அனுபவிப்பவை யாவும் அவன் கொடுத்ததே. எதிர்காலத்தில் கிட்டுவதும் அவன் இன்னருளாலே, என்ற இந்த மேலான தத்துவமும் கிடைக்கப் பெறுகிறது.*

*இதில் இன்னொரு அழகும் காண இயலும். பக்தர்கள் பலர் தத்தம் வாழ்வில் நேரும் தடைகள் களைய இறைவனை நாடுகிறார்கள். அவனும் அவரவர் கருமத்திற்கேற்ப பல்வகை நலன்களை அளிக்கத் தவறுவதில்லை. ஆயினும் அவன் எல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னையே அளிக்கத் தயாராகக் காத்து நிற்கின்றான்.*

*நம்முடைய வாழ்நாள் குறுகியது. காலம் கடந்து சென்று கொண்டே இருக்கிறது. நாம் ஈட்டிய*

செல்வமும், சூழ்ந்திருக்கும் மாந்தரும், உலகியல் சொத்துக்களும் அளிக்கும் மகிழ்ச்சி நாட் செல்லச் செல்ல குறைந்து கொண்டே போகின்றது. அவயவங்கள் சோர்ந்து போகத்துவங்குகின்றன. இந்நிலையில் அவன் அளிக்கும் பெரும் பேறான, அவனையே அடைய விழைவோம்.

வைத்த நாள் வரை எல்லை குறுகிச் சென்று
எய்த்து இளைப்பதன் முன்னம் அடைமினோ
பைத்த பாம்பு - அணையான் திருவேங்கடம்
மெய்த்த சோலை மொய் பூந் தடம் தாழ்வரே
- (திருவாய்மொழி)

வைத்த மாநிதி ஆண்டவன் நமக்கு வைத்திருக்கும் மீதமுள்ள வாணாள் சிலவே. அதற்குள் அவனை அடைய முயல்வோம்.

இச்சூழலில் நல்வழியைப் 'பார்த்தவன்' ஒரு 'சாரதி'. அவனே பார்த்தசாரதி. அவன் காட்டும் 'மாம் ஏகம் சரணம் வ்ரஜ' என்னும் நெறியே குணங்களுக்கு அப்பாற்பட்ட 'குணாதீத' நிலை. இந்நிலையை அடையப் பெற்ற மணிவாசகரும், ஆழ்வார்களும், சங்கரரும் நமக்கு அளிக்கும் உபதேசங்களே நாம் உய்ய நல்வழியாக அமைகின்றன. அவ்வழியை அடைந்தவர்களுக்கு 'நான் யார் தெரியுமா?' என்னும் அகங்கார நிலை விலகி, 'நான் யார்?' என்னும் கேள்விக்கு விடை எளிதில் கிடைத்து விடுகிறது.

## கிரிவலம் வரும் பௌர்ணமி நாட்கள் - 2016

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆகஸ்ட் | 17 | புதன் | மாலை 4.48 | 18 | வியாழன் | மாலை 3.53 |
| செப்டம்பர் | 16 | வெள்ளி | அதிகாலை 03.02 | 17 | சனி | நள்ளிரவு 01.20 |
| அக்டோபர் | 15 | சனி | மதியம் 12.36 | 16 | ஞாயிறு | காலை 10.27 |
| நவம்பர் | 13 | ஞாயிறு | இரவு 10.29 | 14 | திங்கள் | இரவு 08.09 |
| டிசம்பர் | 21 | செவ்வாய் | காலை 08.49 | 22 | புதன் | காலை 06.37 |

# ரமணாயனம்

## க்ரேஸி மோகன்

*[பகவானைப் பற்றியும், அவரது உபதேசங்களைப் பற்றியும் நிறைய நூல்கள் வந்துள்ளன. ஸ்ரீமுருகனாரின் ரமண சந்நிதிமுறை, பகவானின் மகத்துவத்தைத் தமிழ் மரபுப்படி திருவாசக முறையில் எழிலுறப் பாடப்பட்டுள்ளது. அவரது ரமண ஞான போதத் தொகுப்புகளும், குருவாசகக் கோவையும் பல்லாயிரக் கணக்கான பாடல்களைக் கொண்டு, பகவானது உபதேசப் பெருநிதியத்தை தெள்ளத் தெளிவாக அழகிய தமிழ்ப் பாக்களாக அளிக்கின்றன. அதேபோன்று, சாதுராம் ஸ்வாமிகளும் பகவான் உபதேசம் குறித்து எழிலார்ந்த யாப்புடன் பாடல்களை எழுதியுள்ளார். எனினும் இதுவரை பகவானின் வாழ்க்கைச் சரிதத்தையும், அவரது சீரிய உபதேசங்களையும் நினைவூட்டும் முழுமையான கவிதை நூல் வந்ததில்லை. இந்த நோக்கில் எழுதப்பட்டுள்ளது க்ரேஸி மோகனின் 'ரமணாயனம்'.*

*'விக்ரஹவான் தர்ம:' தர்மத்தின் உருவே ராமன் என்று புகழப்படும் ஸ்ரீ ராம பிரானின் வாழ்வினை ராமாயணம் விவரிக்கிறது. ஞானத்தின் உருவேயான ஸ்ரீபகவானின் வாழ்வினை விளக்க எழுந்துள்ளது க்ரேஸி மோகனின் 'ரமணாயனம்'. இலக்கணத் தமிழ் நன்கு பயின்ற அறிஞர் அன்றி ஏனையோர் கையாள அஞ்சும் வெண்பா வடிவில் 424 வெண்பா மலர்களால் தொகுக்கப்பட்டு இந்நூல் மிகச் சிறப்பாகப் படைக்கப்பட்டுள்ளது. இடையிடையே மோகனின் மிருதுவான நகைச்சுவையும் இந் நூலுக்குச் சுவையூட்டுகிறது. நூலைப் பயில்வோமா?*

*இதை முதலில் அமுதசுரபி இதழில் தொடராக வெளியிட்டுச் சிறப்பித்த திரு. திருப்பூர் கிருஷ்ணன், அமுதசுரபி ஆசிரியர் மகிழ்ச்சியுடன் இதை ரமணோதயத்தில் வெளியிட அனுமதித்துள்ளார். அவருக்கு நமது நன்றி. - ஆசிரியர்.]*



# “ரமணாயணம்”

## “பால காண்டம்”

*திருவா திரையில் திருச்சுழி ஊரில்*
*கருவாய் அழகம்மை கர்பம் -உருவாய்*
*பெருந்தவம் செய்த பகவான் ரமணர்*
*பிறந்து துறந்தார் பிறப்பு....(1)*
*பேரூழி காலத்தில் பாராழி புக்காது*
*நீரோய சூலன் நிறுத்திய -ஊராம்*
*திருச்சுழி தோன்றினன், தாயழ கம்மை*
*கருக்குழியில் கர்மம் கழித்து....(2)*

*[இப்பாடல் திருச்சுழி புராண வரலாற்றில் சிவபிரான் பிரளய காலத்தில் சூலத்தை நிறுத்திக் காத்த நிகழ்ச்சியைச் சுட்டிக் காட்டுகிறது.]*

*மகப்பேறு கண்ட முழியற்ற மாது*
*சுகப்ரஸவம் ஆனதும் சொன்னாள் -தகப்பனார்*
*சுந்தரம் அய்யரிடம் ஜோதியைக் கண்டதாய்*
*வந்தசேய் வானத் துறவு....(3)*

*[பகவானின் அவதாரம் நிகழ்ந்த அத் திருவாதிரை நாளில் கண் பார்வை அற்ற ஒரு முதிய மாது பகவான் பிறந்த நொடியில் தான் வானில் ஜோதியைக் கண்டதாய்க் கூறிய அதிசயத்தை எடுத்துக் கூறும் பாடல்.]*

*அன்னாளில் சுந்தரம் அய்யரின் முன்னோர்க்கு*
*சன்யாசி இட்டதோர் சாபத்தால் -பெண்ணாசை*
*துச்சமென்றோர் பிள்ளை துறவறம் பூண்டது*
*இச்சிறுவ னால்வரமா யிற்று....(4)*

*முன்நாக சாமியும் பின்நாக சுந்தரமும்*
*அண்ணனாய் தம்பியாய் ஆயினர் -கண்ணான*
*தங்கை அலமேலு, நான்கில் ஒருவராய்*
*வெங்கட ராமன் வளர்ப்பு....(5)*

*ஆறுவது கோபம் அறியாத ராமன்தன்*
*ஆறா வதுவயதில் அப்பனுடன் -ஏறுக்கு*
*மாறாக பேசி மனைதுறந்தான், கொண்டான்பின்*
*கூறாமல் கோவணக் கட்டு....(6)*

*தந்தையிடம் சொன்ன தகாத வசனத்தால்*
*நொந்த தனயன் நெகிழ்ச்சியால் -உந்த*
*சகாயவல்லித் தாயார்முன் சென்றமர்ந்து வண்டாய்*
*முகாரவிந்தம் மொய்த்தான் மகிழ்ந்து....(7)*

*[சிறுவன் வேங்கடராமன் கேஸ் கட்டுகளை பாழ் செய்ததால் தந்தை கோபிக்க, சிறுவன் சஹாயவல்லி சந்நிதானத்தில் மறைந்திருந்த நிகழ்ச்சியே இப்பாடல்.]*

*கோயில் குளத்தில் குளித்தபின் ஊரெல்லை*
*வாயில் கவுண்டின்யம் வற்றிட -சாயும்*

*பொழுதுவரை நீந்தி பிடித்துவைத்த நீரை*
*தொழுதிடுவான் காளையார் தாள்....(8)*
*[கௌண்டின்யம் - கௌன்டின்ய நதி]*

*தொடக்கப் படிப்பு திருச்சுழியில் பின்னர்*
*தொடர்ந்தது திண்டுக்கல் தங்கி -முடிக்கும்முன்*
*வீட்டில் தகப்பன் விபரீதம், ஞானிக்கு*
*ஏட்டுச் சுரைக்காய் எதற்கு....(9)*

*தகப்பன் மறைவால் திகைத்த குடும்பம்*
*மிகப்பெரும் துக்கத்தை மீள -புகுந்தது*
*தாய்மா னாமதுரை சேயிருவர் சொக்கப்பன்*
*தாய்மீனாள் கூடும் தலம்....(10)*

*வைகையில் நீச்சல், வலியாரை வீழ்த்திட*
*கைவைக்கும் மல்யுத்தம், கோல்சுற்றல் -பொய்யாம்*
*உடலை வளர்த்தான் உலகை அழைக்க*
*கடலின் அலையாய் குதித்து....(11)*

*சகாவான அப்துல் வகாபுடன் சேர்ந்து*
*சகோதரன் போலூரைச் சுற்றும் -மகானிவன்*
*அத்தனை ஜீவனும் ஆன்மன்தான் என்றுரைக்க*
*ஒத்திகை பார்த்தான் உணர்ந்து....(12)*

*சொப்புக் கரங்களால் சித்தி இடப்போகும்*
*அப்பளத்து மாவை அவன்தொட -உப்பலாய்*
*பொங்கிப் பொரிந்திடுமாம் வெங்கட ராமனை*
*“தங்கக்கை” என்பர் துதித்து....(13)*

*எங்கிருந்து வரேளென்று அங்கிருந்த அன்பரிடம்*
*வெங்கட ராமன் வினவிட -எங்கவூர்*
*அண்ணா மலையாம் அருணா சலமென்று*
*சொன்னாராம் மந்திரச் சொல்....(14)*

*இதய குகையில் இதுநாள் வரையில்*
*பதுங்கிக் கிடந்த புலியை -புதியவர்*
*அண்ணா மலையென்(று) அறிமுகம் செய்திட்டார்*
*உண்ணா பசிக்கோர் உணவு....(15)*

*காலம் கனிந்திடும் வேளை வரும்வரை*
*காளை கிடந்தது கன்றாக -நாளும்*
*அருணா சலத்தப்பன் ஆட்கொள்வான் என்று*
*மரணாவஸ் தையில் மகன்....(16)*

*நாயன்மார் போல்நானும் தூயன்பைத் துய்த்திடும்*
*மாயம்நம் வாழ்வில் மலராதா -ஓயாமல்*
*சேக்கிழார் சொன்ன சிவனடியார் போலிருக்க*
*நோக்கினான் நேர்ந்திடும் நாள்....(17)*

*புத்தகம் கையிலே புத்தியோ மெய்யிலே*
*பித்தனைப் போல்வானம் பார்த்திருந்து -அத்தன்*
*புலனாகக் காத்ததில் போனதாம் கல்வி*
*இளமையில் கல்லாய் இவன்....(18)*

*அராவணை நம்பி இராவணன் தம்பி*
*மராமரம்போல் தூங்கி மகிழும் -சிறானிவன்*
*எட்டாத பேரின்ப தொட்டிலேறப் போவதற்க்காய்*
*கட்டுண்டான் சும்மா கிடந்து....(19)*

*[அராவணை - பாம்புப் படுக்கை (ஸ்ரீரங்கநாதன்) நம்பி - தலைவன். இராவணன் தம்பி கும்பகர்ணன் போல் மிக ஆழ்ந்த உறக்கத்தில் சிறுவன் வேங்கடராமன் திளைத்து இருப்பான்.]*

*நரசிம்ம சாமி ஒருசமயம் கேட்க*
*கரிசனமாய் 'நான்'ஒழிந்த கூத்தை -சிரிசிரிக்க*
*சொன்ன பகவானின் சொற்பானை சோற்றிலினி*
*என்நா ருசித்தளவு எள்....(20)*

*(தொடரும்)*

# தணல் மலையின் தண் சுனை

**ரா. கணபதி**

*என்ன ஆச்சர்யம்! ரமண பகவானா இப்படிக் கோபாவேசமாக இறைகிறார்? கடுஞ்சொல்லே அறியாத சாந்தமூர்த்தியாயிற்றே! மிகவும் கோபிக்க வேண்டிய சமயத்தில்கூட "என்ன சேஷ்டை?," "இதென்ன குறும்பு?," என்பதற்கு மேல் 'திட்டத்' தெரியாதவர் இன்று இப்படி "ஹா, ஹூம்" என்று திணறிச் சினக்கும் படியாக ஆச்ரமத்தில் என்ன அக்ரமம் நடந்துவிட்டது?*

*என்ன தெரியுமா நடந்திருக்கிறது? பகவான் எழுந்தருளும் அறைக்கு வெளியே இருந்த மாமரத்தின் பழங்களைப் பறித்தார்கள். எப்படிப் பறித்தார்கள்? கீழேயிருந்தே பெரிய கழிகளால் அடித்துக் கனிகள் விழுமாறு செய்தார்கள். அப்போது கனிகள் மட்டுமின்றி, காய், பிஞ்சு, பூ, இலை எல்லாமும் நிறைய உதிர்ந்தன.*

*மரம் பட்ட அடிகளைத் தாமே வாங்கிக் கொண்டுதான் - முன்பு திருடர்களிடம் தாமே அடிபட்டபோதும் சிரித்துத் தாங்கிக்கொண்டு, அவர்களைப் போலீஸுக்கு அடையாளம் சொல்ல மறுத்த - பகவான் இப்போது தம் இருக்கையை விட்டெழுந்து வெளியே போய் இப்படி மூச்சு வாங்கும்படி காய்கிறார், அல்லது கனிகிறார்!*

*"மரத்தை அடிக்கிறாங்களாம்! ரொம்பப் புத்திசாலிங்கதான்! ரொம்ப நன்றி விச்வாச முள்ளவங்கதான்! ஒரு ப்ரதி ப்ரயோஜனமும் எதிர்பார்க்காமல் அது பழம் பழமாகக் கொடுக்கிற தோல்லியோ? அதற்காகத்தான் தடியால் அடித்து இப்படிக் கொத்துக் கொத்தாகப் பச்சை இலை விழும்படி பண்ணியிருக்கு! பழம் வேணும் என்றால் ஏறி அதுகளை மாத்திரம் பார்த்துப் பறிக்கிறதில்லை? இப்படியா*

கண் மூடித்தனமாக தாக்குகிறது போங்கடா பசங்களா, போங்க! உங்களோட பழமும் வேண்டியதில்லை, ஒண்ணும் வேண்டியதில்லை" - மஹர்ஷி அதம்பிய அதம்பலில் அவரவரும் கழிகளைப் போட்டுவிட்டு ஸப்த நாடியும் அடங்கி நின்று விட்டனர்.

அது அவர்களிடம் அவருக்கிருந்த கோபமல்ல; மாமரத்திடம் சுரந்த கருணைதான்.

லோக மாயை லவலேசமும் தீண்டாமல் ப்ரஹ்ம ஸ்வரூபமாக இருக்கும் ஞானி, உணர்ச்சி மரத்துப் போனவன் என்று நாம் நினைக்கிறோம். ப்ரஹ்மஞானம் என்பதற்குப் பரிபூர்ண வடிவமாயிருந்த ரமண மஹர்ஷிகளோ தாம் மரத்துப் போனவர்தாம் என்பதை வேறொரு விதத்தில் காட்டினார். ஒரு மரத்தினுள் வேரின் அடியிலிருந்து கிளை நுனிவரை நீர் நரம்பு ஓடிக்கொண்டு தண்மை பரப்பியவாறே உள்ளதல்லவா? அப்படி, ஞான மஹா விருட்சமான தம்முள் அடியோடு நுனி ஓடிக் கொண்டிருந்த கருணாமிர்த நரம்பினால் தாம் "மர"த்தவர்தான் என்று காட்டினார். மரத்திடமும் மஹா கருணை காட்டினார்.

எச்சம்மாள் பகவானுக்குச் செய்த தொண்டு ஈடிணை இல்லாதது. மலைமீது எங்கெங்கோ குஹைகளில் அவர் வாஸம் செய்த காலத்திலிருந்து தன்னுடைய மூச்சொடுங்கும்வரை மழையென்று பாராமல், வெய்யிலென்று பாராமல் அவருக்கென அமுதாக்கி எடுத்துச் சென்று படைத்த அமுத மனத்தினள் அவள். எல்லோரிடமுமே அன்பு பொழிந்த ரமணர் அவளிடமும் தமது அதிசய அக்கரையை, ஆழ்ந்த அநுதாபத்தைக் காட்டியிருக்கிறார். அப்படிப்பட்டவள், அதிருமாறு ஒருமுறை அவர் சினத்ததுமுண்டு.

அவளிடம் அன்புக் குறைவால் அல்ல. சற்று முன் கண்டோமே, அப்படித் தாவர வர்க்கத்திடமும் அவருக்கிருந்த தனிப்பெரும் தயையால்தான்.

*அது பகவான் விரூபாக்ஷ குகையில் இருந்து வந்தகாலம். எச்சம்மாள் வீட்டிலே தான் லக்ஷார்ச்சனை செய்ய விரும்புவதாக அவரிடம் சொல்லி ஆசி பெற்றாள். பின்னர். அர்ச்சனை தொடங்கினாள். புஷ்பம், அக்ஷதை, குங்குமம், இவற்றைக் கொண்டு அர்ச்சியாமல், முழுதும் துளசி, பில்வம் போன்ற பத்திரங்களாலேயே லக்ஷமும் செய்வது என்பது அவளுடைய சங்கற்பம். இப்படியே செய்து வந்தாள்.*

*கோடைக்காலம் வந்தது. நெருப்பு மலையின் நெருக்கத்தில் வறுத்து எடுத்தது. மரம், செடி, கொடிகள் வாடின. சருகுதான் கிடைத்ததேயன்றி, துளிர் கிடைப்பது துர்லபமாயிற்று. லக்ஷ பத்ர அர்ச்சனையிலோ இன்னும் ஐம்பதாயிரம் பாக்கி நின்றது. எப்படி முடிப்போம் என எச்சம்மையும் வாடினாள். மலைமீது அலைந்து திரிந்து கண்ணுக்கு அகப்பட்ட பச்சைப் பசும் கொழுந்து ஒன்றைக் கூட விடாமல் பறித்துக்கொண்டு விரூபாக்ஷ குகை அடைந்தாள்.*

*“எப்படி லக்ஷார்ச்சனை முடிக்கப் போகிறேன் என்றே புரியவில்லை, பகவானே” என்று அழமாட்டாக் குறையாக முறையிட்டாள்.*

*ஆறுதல் வார்த்தைக்குப் பதில் கடுசொல்லே வந்தது அவளுடைய கடவுளிடமிருந்து. ஏன்? அவர் அவள் பறித்து வந்திருந்த இளசிலும் இளசான கொழுந்துகளை - குழந்தைகளைப் - பார்த்துவிட்டார்! அதனால்தான்!*

*“பத்திரம் கிடைக்கா விட்டால் என்ன? உன்னையே கிள்ளிக் கிள்ளி அர்ச்சனை பண்றதுதானே?” என்றார்.*

*“ஐயோ வலிக்காதா?” என்றார் எச்சம்மாள்.*

*“ரொம்ப சரி, உன் உடம்பைக் கிள்ளிக் கொண்டால் உனக்கு வலிக்குமென்றால், மரம் செடி கொடிகளுக்கு மட்டும் இலையைக் கிள்ளினால் வலிக்காதா?”*

எச்சம்மாள் வெளிறிவிட்டாள். சமாளித்துக் கொண்டபின், "முன்னாலேயே எனக்கு ஏன் ஸ்வாமி நீங்கள் இப்படிச் சொல்லவில்லை?" என்று கேட்டாள்.

"நான் எதற்குச் சொல்லணும்? உன் உடம்பைக் கிள்ளிக் கொண்டால் உனக்கு வலிக்கும் என்று உனக்காத் தெரிகிறதோ இல்லையோ? நான் சொல்லியா தெரிகிறது? அதே மாதிரிதான் விருக்ஷாதிகளுக்கும் என்று தனக்காகவே எப்படித் தெரியாமல் போகும்?"

தன்னுயிராக மன்னுயிரைப் பார்த்த மன்னவர் நம் மஹர்ஷி என்பதற்கு இது போதாதா? போதும்தான். ஆனாலும் இது தெவிட்டா அமுதாயிருப்பதால் இன்னம் சிலவும் பார்ப்போம். மரம் மட்டையில் தொடங்கிய அன்பு எப்படி மிருகங்கள் வழியாக மனிதர்கள் வரை பாய்கிறதென்பதைப் பார்ப்போம்.

சிற்றெறும்பிலிருந்து சிறுத்தை வரை யாவும் அவரது பரிவைப் பெற்றன. ஆச்ரமத்தில் பெண்டிர் ஏகமாக இழை கோலமும் மாக்கோலமும் போட்டபோது பகவான் இதை மதித்து இழையை மிதியாமல் தாண்டித் தாண்டியே வந்தாலும் அவரால் அதன் அழகை ரசிக்க முடியவில்லை. இப்படி அரிசி மாவைத் தரையோடு தரையாக ஒட்டி இழை கோலம் போட்டால் எறும்புகள் எப்படி அதைத் தின்ன முடியும் என்றுதான் விசாரப்பட்டார். பொடியால் போட்ட மாக்கோலமாவது அரிசி மாவாக இருந்திருக்கக் கூடாதா? அதுவோ சுண்ணாம்பு மயமான மொக்கு மாவாக இருந்தது. அந்தக் கோலம் போட்ட மூதாட்டியை அழைத்து, "பாட்டி, கொஞ்சமாவது அரிசி மாவைக் கொண்டு வந்து கோலம் போடேன், இந்த மொக்கு மாவை எறும்பு தின்ன முடியாதது மட்டுமில்லை; இதன் நெடியில் செத்தே போகும்!" என்றார். எறும்புகளின் உணவுக்கென்றே ஆன்றோர் ஏற்படுத்திய கோல வழக்கத்தைத் தங்கள் கலைத்திறனின் அழியாத காட்சிப்

*பண்டமாக்க வேண்டும் என்று இப்படிச் செய்து விட்டார்களே என்று வருத்தம் தெரிவித்தார்.*

*பாம்பை, தேளை அடித்தால்கூட, "அப்பன்மார்களா! இந்த ஆச்ரமம் நகரத்தில் கட்டினதல்ல. மலைக் காட்டில் என்னவோ எப்படியோ உருவாகியிருக்கிறது. இந்த இடம் பாம்புக்கும் தேளுக்கும் குரங்குக்கும் புலிக்கும்தான் சொந்த பூமி. அதை நாம் வந்து ஆக்ரமித்துக் கொண்டு, அவற்றை அவற்றின் வீட்டிலிருந்து விரட்டுவது என்ன ந்யாயம்?" என்பார்.*

*அவரிடம் மட்டும் பாம்பும் புலியும் கூட வித்தியாசமின்றியேதான் பழகின. அந்த அன்பு மனத்தின் மாண்பை, மனிதரையும்விட நன்றாக விலங்கினங்கள் புரிந்துகொண்டு ஒட்டி உறவாடின.*

*அவர் மலைமேலிருந்த நாட்களில் குரங்குப் பட்டாளங்கள், வானர சேனை ஸ்ரீ ராமச்சந்த்ர மூர்த்தியைத் தலைவனாகக் கொண்டிருந்தது போல, அவரையே யஜமானனாகக் கொண்டிருந்தது ஓர் அற்புதம். அவற்றிலே ஒரு ராஜா இறந்து, அடுத்ததின் பட்டாபிஷேகம், அவற்றுக்குள் விவாஹம், விவாஹ ரத்து ஆகிய எல்லாவற்றுக்கும் பகவானின் ஒப்புதல் பெற்றே அவை செய்யும். குரங்கு பாஷை என்று ஒன்றைப் பேசியா அவர்கள் பரஸ்பரம் ஸம்பாஷித்துக் கொண்டார்கள்? அல்ல; இதய மொழியாம் அன்பிலேயே உறவாடிக் கொண்டனர்.*

*மலையடிவாரத்தே ஆச்ரமம் அமைத்தபின், "பசங்கள் இங்கே வரமாட்டானுகளே!" என்று பரிதவித்தார் பரம விராகி.*

*(அடுத்த இதழில் நிறைவுறும்)*

*[நன்றி: ரா. கணபதியின் 'தரிசனம்' திவ்ய வித்யா டிரஸ்ட், சென்னை]*

# சன்மார்க்கம் ஓர் அறிமுகம்

## சு.பரமேஸ்வரன், கோவை

*சன்மார்க்கத்தின் அடிப்படை நெறி:*

*இந்து மதம் என்பது சனாதன தர்மம் என்பர். இது ஒரு தத்துவம் அல்ல. வாழ்வியல் நெறி, வாழ்க்கைப் பாதை எனலாம். சனாதன தர்மம் வேர் எனில் சன்மார்க்கம் அதன் விழுது. வேரும், விழுதும் வேறல்ல, ஒன்றேதான் எனக் காண்பது அறிவுடைமை. சன்மார்க்கம் அல்லது உண்மை நெறியானது எல்லாச் சமய நற்பண்புகளையும் தன்னுள் உள்வாங்கி விரிந்து, பரந்துபட்டு சமயங்கடந்துள்ளது.*

*சன்மார்க்கம் என்றவுடன் எல்லோருடைய நினைவுக்கும் வருவது, வடலூரில் வாழ்ந்த வள்ளலார் இராமலிங்க அடிகள்தான். அண்மைக் காலத்தில் வடலூரில் சன்மார்க்க சங்கம் நிறுவி பிரசாரம் செய்தமையால் இது அவரால் தோற்றுவிக்கப்பட்டதாக எண்ணத் தோன்றும். ஆனால் சன்மார்க்கம் என்ற சொற்றொடரை முதன்முதலாக தமிழில் எடுத்துரைத்தவர் திருமூலரே. அவருக்குப் பின் வந்த தாயுமான சுவாமிகளே சன்மார்க்க நெறியை விரிவாக எடுத்துரைத்தார். சன்மார்க்கம் என்பது தன்னை - தன் பிரக்ஞையை உணர்வதுதான். அதுவே பிறவியின் நோக்கமாகவும் வேத சாரமாகவும் உள்ளது. பாடலைப் பாருங்கள்.*

*“சன்மார்க்க ஞானமதின், பொருளும் வீறு*
*சமய, சங்கேதப் பொருளும், தான் ஒன்று ஆகப்*

*பன்மார்க்க நெறியினிலும் கண்டது இல்லை,*
*சங்கர, சுயம்புவே! சம்புவே! என மொழி*
*தழுதழுத்திட வணங்கும்*
*சன்மார்க்க நெறியிலா, துன்மார்கனேனையும்*
*தன் அருள் கொடுத்து ஆள்வையோ?!"*

*- தாயுமானவர்*

*சன்மார்க்கம் என்பது சமயம் கடந்த ஞானமார்க்கம். சரியை, கிரியை என்ற நிலைகளைக் கடந்தவர்களே சன்மார்க்க நெறியை கடைபிடித்து ஒழுக இயலும். சன்மார்க்கத்தில் ஒளி காட்டுவது அன்புதான். அன்பின்றி வாழ்வில்லை. வாழ்வை முன்னேற்றும் சக்தி அன்புதான். தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்தலே சன்மார்க்கமாகும். அதுவே கடவுள் வழிபாடுமாகும். இச்செம்மை நெறியை இந்நாளில் கடைபிடித்து ஒழுகுபவர் மிகச்சிலரே. எம்மதத்தைச் சார்ந்தவராயினும் தம் சடங்குகளைப் பற்றியே கவலை கொள்கிறார்களே தவிர, தம் உண்மைக் கடமைகளை மறந்தே வாழ்கிறார்கள். அநேகர் அன்னதானம் செய்வதும், பாடல்களை மனனம் செய்துகொண்டு பட்டிமன்றங்களில் பேசுவதையே சன்மார்க்க நெறியாகக் கொண்டுள்ளனர். கற்றபின் நிற்க அதற்குத் தக என்ற வள்ளுவரின் வாக்கு ஏனோ நினைவிற்கு வருவதில்லை. மனிதனின் முதல் கடமை என்ன? அதை அன்றே சொன்னாள் அவ்வை. அறஞ் செய விரும்பு என்று தர்மம் செய்ய ஆசையுண்டானால் அனைவர்பாலும் அன்பு உண்டாகும். அன்பின் மேலீட்டால் யான், எனது என்ற தற்போதம் நீங்கும். அருளின் முதிர்ச்சியால் அறிவு துலங்கும். புகழ், பொருள் பெறுவதற்காக நற்செயல்கள் செய்தல் கூடாது. உண்பதும், அன்னதானம் செய்வதும் உணவிற்குச் செய்யும் பணி அல்ல. நாம் உயிர் வாழச் செய்யும் பணி. இறைபணி என்பதும் இறை நலத்தை உயிட;கள் பெறச் செய்யும் மகேசன் பணி. காமம், கோபம், பொறாமை, வெறுப்பு*




தாயுமானவர்

எனப்படும் அறுவகையான விஷத்திற்கும் ஒரே முறிவு மருந்து உண்டு. அதுவே அன்பு. அன்பின்றி அறமில்லை. அன்பு என்பது அறிந்தவர்களிடம், சுற்றத்தாரிடம் காட்டுவது. அருள் என்பது அனைவரிடமும் செலுத்துவது.

திருவள்ளுவரும் அருள் என்னும் அன்பீன் குழவி என்றார். இவையெல்லாம் சன்மார்க்கத்தின் அடிப்படை நெறியாகும்.

வள்ளல்பிரான் சிறு குழந்தையாய் இருந்தபோது அவரது பெற்றோர் அவரை சிதம்பரத்திற்கு அழைத்துச் சென்றனர். தந்தையாரின் தோளில் அமர்ந்திருந்த குழந்தை தீட்சதர் கற்பூரதீபம் காட்டிய சமயம் கல, கலவென்று கைகொட்டி சிரித்ததாக செவிவழி செய்தியுண்டு. அந்த தெய்வக்குழந்தையின் சிரிப்பின் பொருள் என்னவோ? சிதம்பரம் என்பது ஆகாயத்தின் குறிப்புத் தலம். உலகில் மனிதர்கள் எல்லோரும் அகப்பொருளை அறிந்து, உய்யும் ஆற்றல் இல்லாதவர்களாக இருப்பதால் மானுட சாகர இயல்புகளையே ஆலயங்களில் வெளிநோக்காக காட்டப்பட்டுள்ளது. மானுட இதய கமலத்தின் நுட்பத்தை ஆத்ம ஜோதியை விரித்து கூறுவதாக சிதம்பரத்தலம் அமைக்கப்பட்டுள்ளது. தில்லை வெளியிலே சமயாதீதப் பரம் பொருளைக் காணலாம் என்பது சன்மார்க்க நெறியாகும். சிதம்பர தத்துவம் என்பது ஒரு கொள்கையன்று. அது மெய்யுணர்வு. யாவரும் அடையத்தக்க நிலை. வெளிக்கு மேலே உள்ளது உருவமற்ற நிலை, அநாதி பேரறிவு. அதுவே அருட்பெருஞ்ஜோதி, எல்லையற்றது, உரையற்றது. இதை உணர்ந்தவர்களே சன்மார்க்கர், சித்தர், முத்தர்.

சாந்தோக்கிய உபநிடத்திலும், கைவல்ய உபநிடத்திலும் கூறப்பட்டதே தகர வித்தை. நம் தேகமாகிய கோவிலில் இறைவன் இருக்கிறார். இதய கமலத்தில் ஆண்டவன் திருநடனம் புரிகிறார் என்பதே அக் குறிப்பாகும். சிதம்பரத் தலம் எம் மதத்தாரும் ஏற்றுக் கொள்ளத்தக்க இடமாகவும் உள்ளது. ஆனந்த நடராஜர் சமயாதீதக் கடவுள் ஆகும். இதுவே குறியை குறியாது குறித்து அறியும் அறிவு. அறிவுடையோர் ஏற்றுக் கொள்வர். தெய்வக்குழந்தையின் சிரிப்பின் பொருளும் இதுவே.



திருமூலர்

கண்களிக்கப் புகை சிறிதும் காட்டாதே புருவத்தின்
கலை நடுவே விளங்குகின்ற கற்பூர விளக்கே
அருட்;ஜோதித் தெய்வம் எனை ஆண்டு கொண்ட தெய்வம்.
என் இதயக் கமலத்தே இருந்தருளுந் தெய்வம்.

- திருவருட்பா

*குருமார்க்கமே சன்மார்க்கம்:*

சன்மார்க்கத்தின் உயர்லட்சியங்களைக் குறித்து திருமூலர் 10 பாடல்கள் எழுதியுள்ளார். அதில் சன்மார்க்கத்தின் இலக்கணம் கூறும் பாடல் இதோ : -

“சைவப்பெருமைத் தனிநாயகன் நந்தி
உய்ய வகுத்த குருநெறி ஒன்றுண்டு
தெய்வசிவநெறி, சன்மார்க்கம் சேர்ந்துய்ய
வையத்துள்ளோர்க்கு வகுத்து வைத்தானே”

“தெரிசிக்க, பூசிக்க, சிந்தனை செய்ய
பரிகசிக்கக், கீர்த்திக்கப்பாதுகஞ் சூடக்
குருபத்தி செய்யுங்குவலயத்தோர்க்குத்
தரும் முத்திசார் பூட்டும் சன்மார்க்கந் தானே”

*மனிதனின் அறிவு, திறமை எல்லாம் அற்பம். இந்த அற்பத்திறன் கொண்டு, அகண்டமான இறைநிலையை அறிய முடியாது. இறைவனுக்கும் உருவம் கிடையாது. இளைவன் ரூபத்துடன் வரும்போது அவர்கள்தான் சற்குருவாக திகழ்கிறார்கள்.*

*"ஐயனே எனதுள்ளே நின்று*
*அநந்தஜென்மங்கள் ஆண்ட*
*மெய்யனே, உபதேசிக்க வெளிவந்த குருவே போற்றி"*
*- கைவல்ய நவநீதம்*

*இறைவனை யாரும் நேரடியாகப் பார்க்கவில்லை. எவர் நிஷ்களமாய், எப்போதும் சாந்த சொரூபியாக, அப்பழுக்கற்று உள்ளாரோ அவரிடத்தில் சரண் அடைந்து, அன்பு செலுத்தினால் எல்லாம் நமக்குக் கிட்டும். குரு என்றால் இருளைப் போக்குபவர் என்று பொருள். இருள் என்பது அறியாமை. மனப் பொருளில் அறியாமை குறை-மருள். தற்போதம் நீங்கிய பொதுநிலை ஒளி - அருள், அதுவே இறைநிலை. உண்மையான குருபக்தி இருக்குமேயானால் அவர் நம்மீது காட்டும் கருணையே அனுக்கிரக சக்தியாக, நம் அறியாமையை நீக்கும் என்பது உறுதி.*

*இதைத்தான் அருட்பிரகாச வள்ளலார் மறைபொருளாக தயவு மோட்ச வீட்டின் திறவுகோல் என்றார்.*

*குரு நம்மைத் தடுத்தாட் கொண்டு நம்மீது காட்டும் அன்பிற்கு தயவு, கருணை என்று பெயர். ஆக, மோட்ச வீட்டின் திறவு கோல் சற்குருபிரான் கையில் உள்ளது. மறைபொருளாய் சாஸ்திரங்களில் சொல்லபட்ட சூட்சுமங்கள் நம் அனுபவத்திற்கு வர ஒரு சற்குருவின் உதவியின்றி எவராலும் எவ்விதத்திலும், எப்பாடுபட்டாலும் அறிந்து கொள்ள முடியாது. நமது தர்ம சாஸ்திரங்கள் வெளிமுகத்தேடல் உள்முகத்தேடல்*

*இரண்டையுமே அங்கீகரித்துள்ளன. இரண்டிற்குமான வழிமுறைகளையும் சிறப்பாக வரையறுத்துள்ளன.*

*ஆனால் உள் முகத் தேடலான உயர் ஞான நிலையை அடைய விரும்பி முயற்சி செய்வோர் கோடிக்கு ஒருவரோ, இருவரோதான் இருப்பாட;கள் என உத்திர ஞான சிதம்பர மாலையில், வள்ளல்பிரான் பாடியபாடல் இதோ*

*"குருநெறிக்கே என்னைக் கூட்டிக்கொடுத்தது கூறிதாம்*
*பெருநெறிக்கே சென்றபோ;க்குக் கிடைப்பது,*
*பேய்உலகம் கருநெறிக்கு ஏற்றவா; காண்பது அரிது*
*துரிய மேற்பரவெளியிலே சுக நடம் புரியும்*
*பெரியதோர் அருட்சோதியைப் பெறுதலே*
*எவர்க்கும் அரிய பேறு; மற்றவையெலாம் எளியவே*
*அறிமின், உரிய இம்மொழி மறைமொழி*
*சத்யம் உலகீர்"*

*சத்தியத்தை தேடும் உள்முக தேடலை விட, மற்ற எல்லா வழிமுறைகளும் எளிமையானவை என ஆணையிட்டு கூறுகிறார். சரியை, கிரியை, பக்தி, கர்மம், யோகம் எனப் பல வழிகள் அதிலும் பல நூறு பிரிவுகள் உண்டு. அவையாவும் எளிய வழிகள்தான். ஆனால் பிறவிப் பிணியை ஒழிக்கும் தன்னை உணரும், ஆத்ம ஞானத்தை தேடுபவர; மிக, மிக அரிதாகவே இருப்பார்கள் என்பது வள்ளலார் வாக்கு.*

*ஞான வழி உள்ளங்கை நெல்லிக்கனி போன்றது என்பார் ரமணர். ஆனால் இதற்கு நேர் மாறாக ஐயே அதிசுலபம், ஆன்ம வித்தை ஐயே அதிசுலபம்! என்றே பாடியுள்ளார். அத்துவித சாதனைக்கு எல்லோருமே உரிமையுடையவர்கள்தான். குலம், கல்வி என்று யோக்யதாம்சம் என்று எதுவும் வேண்டாம். தன் உண்மை நிலையை அறிந்து கொள்ள தகுதி எதற்கு? தான், தானாவதற்கு, உண்மையான அருள்தாகம், தீவிரமான வேட்கை மட்டுமே வேண்டும் என்பார்.*

*வள்ளல்பிரான், ரமணர் இருவர் கூற்றில் எது உண்மை? இரண்டுமே உண்மைதான்! எப்படி? தர்மசங்கம், இக்கட்டான நிலை என்பது முற்றிலும் முரண்பாடான இரு நிலைகளுள் எதனை ஏற்பது என்று தவிக்கும் நிலை, சிந்தனையாளர்களுக்கு மட்டுமே ஏற்படும்.*

*ஏனையோர்க்கு அவர்களது ஆசைகளே அவர்களை வழிநடத்தும். ஒரு புறம் நல்லதை மனம் நினைக்கும் மறுபுறம் ஆசாபாசாங்கள் அவர்களை இழுத்து வழிநடத்தும். காரணம் பல கூறி எதன் மீதாவது தங்கள் சுமையை இறக்கி விடுகின்றனர். இரண்டு நிலைகளும் ஒவ்வொரு மனிதனிடமும் உள்ளது. மனநிலையைப் பொறுத்து மனித வாழ்வு அமையும்.*

*ரமணரின் 54 ஆண்டு உலக வாழ்வில், அவரது உத்தம அடியார்களான பழனிசாமி, குஞ்சு சுவாமி, அண்ணாமலை சுவாமி, எச்சம்மா, முதலியார் பாட்டி, அகிலாண்டத்தம்மாள் போன்றவர்கள் மிக ஏழ்மையான குடும்பத்தில் பிறந்து, பாமரர்களாய், கல்வி, கேள்வியற்று, எவ்விதமான பின்புலமும் இன்றி, பகவானை அண்டி சரணடைந்து, ஆன்மீக வாழ்வில் உயர்நிலையை அடைந்தது எவ்வாறு சாத்தியமாயிற்று? அவர்களது பூர்வ புண்ணியமா? அல்லது அவர்களது மனதில் தோன்றிய எண்ணமா? பாடலைப் பாருங்கள் :*

> *"மனத்தில் எழுந்ததோர் மாயக்கண்ணாடி*
> *நினைப்பின், அதனின் நிழலையுங்காணார்,*
> *வினைப்பயன் போக விளக்கியுங் கொள்ளார்.*
> *புறக்கடை இச்சித்து போகின்றவாறே"*

- திருமூலர்

*என் மாயசக்தியால், பிரபஞ்சைத்தை உருவாக்கி, தன் இச்சைப்படி ஆட்டிப்படைக்கின்றேன் என்று கீதையில் கண்ணன் மாயையின் ஆதாரமாக தன் மனதைத்தான் குறிப்பிடுகிறார். மனதின் ஒரு வகை இயக்கம் மாயை,*

*மற்றொரு வகை இயக்கம் ஞானம், ஆக மனம்தான் குரு.*

***"குருவின் அடிபணிந்து கூடுவது அல்லார்க்கு***
***அருவமாய் நிற்கும் சிவம்" - அவ்வை***

*மனிதனை ஆட்டிப் படைப்பது நாலு விஷயங்கள். அறிவு, பணம், ஆசை, அன்பு. இதில் பணமும் ஆசையும் விரைவில் மறைந்து விடும். அன்பும் அறிவும்தான் எப்போதும் ஆட்சி செய்யும். நல்ல வசதியோடு வாழும் போதும், பொழுது போக்காக பேசும் தத்துவம் உதட்டிலே இருந்து பிறக்கும். வேதனையிலும், வறுமையிலும் பேசும் தத்துவம் மனதில் இருந்து உதிக்கும். ஞானிகள், அருளாளர்களது சரிதங்களையும், சத்ய வாக்குகளையும் படித்து சிந்தித்தால் பலன் கிடைக்கும். பக்கம் புரட்டினால் பொழுது கழியும். இது அவரவர் விருப்பம். மனிதன் மனதல் நினைக்கிறான், செயல்படுகிறான். மனமோ, நினைப்போ கண்ணுக்குத் தெரிவதில்லை. அதனால் நினைப்பது பொய்யாகுமோ? உடலில் உயிராய் இயங்கும் பிராண சக்தி கண்களுக்குப் புலனாவதில்லை. அதனால் உடலில் சக்தி இல்லை எனலாமோ? அணுவின் பேராற்றலைக் காணும் கண்கள் அணுவை காண முடியாத போது, எல்லா இயக்கத்திற்கும் காரணமான பேரருளை எப்படி காண முடியும்? ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையிலும் இரு மனப் போராட்டம் எப்போதும் நடந்து கொண்டேதான் இருக்கிறது. மனிதன் தன் விருப்பப்படி வாழ இயலும். வினையின் கைப்பாவையாய் இருக்கத் தேவையில்லை. புராணங்களில் வரும் பக்தர்கள், அசுரர்களின் கதைகளே இதற்கு நல்ல சான்றுகளாகும். அசுரர்கள் கடுமையான தவம் செய்து தெய்வங்களைத் தமக்கு உகந்தவாறு தமது விருப்பப்படி செயல்படச் செய்து இறுதியில் அழிவையே சந்தித்தார்கள். ஆனால் பக்தர்கள் தன் கர்மவினையை செயல்பட முடியாமல் அழித்து, தெய்வ வாழ்க்கையை வாழச்செய்து,*

சாயுச்சியம் அடையும்படி தெய்வங்களை வேண்டிப் பயன் அடைந்தவர்கள். ஆக வாழத் தெரிந்து அதன்படி வாழ உறுதி கொண்ட மனிதனை, வினையோ, சூழ்நிலையோ, பாவ, புண்ணியமோ அவனை ஆட்டிப் படைக்க முடியாது. முடிவாக அது நல்லது, இது தீயது, இதை நான் செய்தேன், இது ஆகாது, இது ஆகும் என வேறுபடுத்தாமல், பகவானின் திருவடிகளையே மறவாது, சரணடைந்து ஒன்றுபட்டு நின்ற நிலையே உயிர் பெற வேண்டிய உண்மை நிலையாகும்.

அனுசயப்பட்டு அது, இது எண்ணாது, கனி மனத்தோடு கண்களும் நீர் மல்கிப் நம் புனிதன் ரமண பகவானைப் போற்றுவார் மனிதரில் தலையான மனிதரே.

"அருட்ஜோதித் தெய்வம் எனை ஆண்டு கொண்ட தெய்வம்
அம்பலத்தே ஆடுகின்ற ஆனந்த தெய்வம்
எண்ணிய, நானெண்ணியவாறு எனக்கு அருளும் தெய்வம்
தாயாகி, தந்தையுமாகி தாங்குகின்ற தெய்வம்
வாயார வாழ்த்துகின்றவர; மனத்தமர்ந்த தெய்வம்
மலரடி என் சென்னிமிசை வைத்த பெருந்தெய்வம்
கருணைநிதி தெய்வ முற்றும் காட்டுவிக்கும் தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்"

## ஸ்ரீ ரமணாச்ரமம் - தமிழ் முகநூல் பக்கம்

ஸ்ரீ ரமணாச்ரமம், திருவண்ணாமலை 'ஸ்ரீ ரமணமகரிஷி' என்ற பெயரில் தமிழ்வழி முகநூல் பக்கத்தை (Facebook Page) துவக்கியுள்ளது. இந்த முகநூல் பக்கத்தின் வாயிலாக ஆச்ரம நிகழ்வுகளை பக்தர்கள் உடனுக்குடன் அறிந்து கொள்ளலாம்.

# செவியின்பம் - பரபக்தி

**வஸந்தா ராகவன்**

*ஒரு குறிப்பிட்ட இடைவெளிக்குப் பின் மீண்டும் சந்திக்கிறேன். இந்த இடைவெளியில் எத்தனையோ உலகியல்பால் பட்ட அனுபவங்கள்! எத்தனை மனிதர்கள்! யதார்த்த நிலைக்கு அப்பாற்பட்ட நடவடிக்கைகளும், எதிர்பார்ப்புகளும் உள்நோக்கமுமே குறிக்கோளாய்க் கொண்ட சந்திப்புகள்! இங்ஙனம் எதிர்பார்ப்பு இல்லாத எளிமையான உள்ளங்களைக் கேலி செய்யும் பேச்சுக்கள். தன்னையே தான் விளம்பரப்படுத்திக் கொண்டு தன் செயலுக்குகந்த காரணிகளைக் காரணிகளாய்க் கொண்டே செயல்படும் மனித நடவடிக்கைகள். ஆய்ந்து பார்த்தால் இவை அனைத்திற்கும் அடிப்படைக் காரணம்.*

*“நிர்வாணமான நோக்குடன் பார்! அப்போது மஹா முத்திரை உனதாகும்” என்கிறார் ஒரு ஞானி. கோளாறுள்ள கண்களில் கோளாறுள்ள பார்வையே இருக்கும். ஒரு வஸ்துவின் யதார்த்த ஸ்வரூபம் புலப்படாது. மாசு, மறுவற்ற கண்ணாடிபோல மனம் தூய்மையாக இருக்கும்போது, உள்ளதை உள்ளபடி உணர்வோம். அலைபாயும் மனமாகிய யானையை பகவானிடம் சரண் என்ற சங்கிலி போட்டுக் கட்டுங்கள். “மனம் போன போக்கெல்லாம் போக வேண்டாம்” என்ற ஆன்றோர் மொழிப்படி பகவான் காட்டும் வழிப்படி நடந்தால், விஷய வஸ்துக்கள் என்னும் தீனி இன்றி, மனம் ஓய்ந்து விடும்.*

*கடந்த சில திங்களில் நான் பங்குபெற்ற சத்சங்க உரையாடல்களிலிருந்து நான் கற்றவற்றை இங்கே சமர்ப்பிக்கின்றேன். யதார்த்த நோக்கு, மற்றும் பாவ பலம் பற்றி நமது ஆசிரியர் ஆற்றிய உரையாடல்கள்,*

ஞானிகளின் உள்ளார்ந்த நோக்கு பற்றிய இக்கருத்துக்கள் நான் உள்வாங்கிய அளவிலே இங்கே எழுதுகிறேன்.

நம்மைப் பக்குவ நிலைக்கு இட்டுச் செல்லும் மிகச் சக்தி வாய்ந்த சாதனம் நம் பகவான் மீது நாம் கொள்ளும் ஆழ்ந்த பக்தியே. இடையறாது நாம் செய்யும் பக்தியினால் நம் மனதின் மாசுக்கள் அழிந்து அது மாயையைத் தாண்டிச் செல்லும் வலிமையை, பலத்தைப் பெறுகிறது.

பா$^4$வ பலத்தினால் பா$^4$வனாதீ$^3$த ஸத்
பாவ$^4$த்து இருத்தலே உந்தீபற
பரப$^4$க்தி தத்துவம் உந்தீபற

என்பது பகவானின் உபதேசம். அந்தப் பரமாத்மாவை ஸத்குரு வடிவில் ஆன பாவனையுடன் மனதில் இடையறாது எண்ணி வந்தால் அந்த பாவனையே மனதிற்கு அதீத பலத்தைத் தருகிறது. இந்த பாவனையின் மூலம் பாவனைக்கும் நினைப்பிற்கும் எட்டாததான 'இருப்பினை' - 'ஸத்'தினை - அறிந்துகொண்டு அதனுடனே ஒன்றிவிடுவாய். இதுவே பரபக்தி என்கிறார் பகவான்.

ஒரு சாதகன் பௌதிக சம்பந்தமான தனது உடைமைகள் அனைத்துமே இறைவனுக்கு அர்ப்பணமாகக் கொடுக்கிறான். அந்தச் சமயம் தன்னையே இறைவனுக்கு முழுதுமாக அர்ப்பணிக்க அவனுக்குத் தோன்றுவதில்லை. இந்நிலையில் ஸத்குருவே அவன் உள்ளத்தில் புகுந்து அவன் அகந்தையையும், மமகாரத்தையும் அழித்து அருள் கூட்டுகிறான். ஸத்குருவின் அருளாலேயே பரபக்தி நிலையும், அத்வைத தன்னிழப்பு நிலையும் கூடுகிறது.

'பக்தித் துறை இழிந்து
ஆனந்த வாரி படிவதினால்
புத்தித் தரங்கம் தெளிவது'

என்று அருணகிரியார் குறிப்பிடும் நிலை அடைகிறான்.



இந்த பரபக்தி நிலையை ஆத்மசாதனை மூலமும் ஸத்குருவினிடம் நாம் காட்டும் இடையறா பக்தியின் மூலமும் அடையத் தவறி விட்டோமானால், எல்லா நலன்களையும் இழப்போம். எனவே ஸத்குரு ரமணர்மீது இடையறா பக்தி இன்றியமையாதது.

நைந்தழி கனியான் நலன்இலை; பதத்தில்
நாடிஉட் கொள் நலம் அருணாசலா

என்று நம் சார்பாகப் பகவான் பிரார்த்திக்கிறார்.

“பிரம்மம் நிர்குணம். அதனை விசாரணையின் மூலம் அறியவேண்டும் என்று கூறுகிறீர்கள். அதேசமயம் ஸகல உயர் குணங்களைக் கொண்ட ஸத்குரு ரமணனாகவும் அருணாசலமாகவும் கருதி வேண்டுகிறீர்கள். இது எப்படி ஒத்துவரும்?” என்று நம் ஆசிரியரை அன்பர் ஒருவர் சென்ற ஸத்ஸங்கத்தில் கேட்டபோது ஆசிரியர் கூறினார். எந்த அத்வைத ஞானியுமே நிர்குணப் பிரம்மத்திற்கும் ஸகல கல்யாண குணம்கொண்ட இறைவனுக்கும் பேதம் காணவில்லை என்று கூறிய அவர், மதுந்தன ஸரஸ்வதியின் ஸ்லோகமாகிய “நிர்குணமாகிய, நிஷ்களங்க வஸ்துவாக எதை யோகிகள் தியானத்தில் அனுபவிக்கிறார்களோ

*அதையே யமுனாதீரத்தில் மணல்வெளியில் நீலஜோதி வெள்ளமாக ஓடிவிளையாடும் கண்ணனாக நான் கண்டு மகிழ்கிறேன்". எல்லா ஈஸ்வர வடிவங்களும் ஒன்றேயான பிரம்மம்தான் என்று அறிந்த ஞானிகளும், தங்கள் தவத்தின் ஆரம்ப காலத்தில் தங்கள் மனத்தைக் கவர்ந்த ஒன்றில் ஞானானுபூதி பெற்ற பின்னரும் விசேஷமான பரபக்தி செலுத்தினர்.*

*இந்தப் பரபக்தி நிலையினை சிவானந்த லஹரி 61ஆவது ஸ்லோகத்தில் சங்கர பகவத் பாதர் எடுத்து உரைப்பதை பகவான் தனது தேர்ந்த மொழிமாற்றத்தில் விளக்குகிறார்.*

*அங்கோலம் நிஜபி$^{3}$ஜ ஸந்ததி ரயய் காந்தோபலம்ஸுூகிகா*
*ஸாத்$^{4}$வீ நைஜ விபு$^{4}$ம் லதாக்ஷிதிருஹம் ஸிந்து$^{3}$ஸ் ஸரித்$^{3}$ வல்லப$^{4}$ம்*
*ப்ராப்நோதீஹ யதா$^{2}$ ததா$^{2}$ பஸுூபதே: பாதா$^{3}$ரவிந்த$^{3}$வயம்*
*சேதோ வ்ருத்தி ருபேத்ய திஷ்ட$^{2}$தி ஸதா ஸாப$^{4}$க்திரித்யுச்யதே*

*இதில் கூறப்பட்ட ஐந்து உதாரணங்களை பகவான் விளக்கத்துடன் பொருத்திப் பார்ப்போம்.*

*(1) ஏறழிஞ்சில் (அங்கோலம்) என்று ஒரு மரம் உண்டாம். அதன் காய் முற்றியவுடன் தரையில் விழுந்து உடையும். உள்ளே இருக்கிற விதைகள் ஏதோ ஓர் ஈர்ப்பு சக்தியால் நகர்ந்து நகர்ந்து மீண்டும் தாய் மரத்தினுடனேயே ஒட்டிக் கொள்ளும். பின்னர் மரத்துடன் ஒன்றாகிவிடும். பகவானிடமிருந்து பிரிந்து வந்துள்ள நாமும் இப்படியே ஆத்மிகப் பயிற்சியின் மூலம் இறைவனை நோக்கி நகர்ந்து அவனுடன் ஒன்றாகி விட வேண்டும்.*

*ஒப்பு: அழகு சுந்தரம்போல் அகமும் நீயும்உற்று*
*அபின்னமாய் இருப்போம் அருணாசலா*

*(மணமாலை 2)*

*(ii) ஊசி காந்தத்தை நோக்கிப் பாய்ந்து ஒட்டிக் கொள்ளும். காந்தத்துடன் சேர்ந்த ஊசிக்கும் காந்தசக்தி உண்டாகி அது மற்றைய பொருட்களை ஈர்ப்பதுபோல் பக்தனுக்கும் பகவானின் அருள்புலம் சூழ்ந்து*

*ஏனையோர்க்கும் நலம் செய்யும். இதுவே பகவான் உள்ளது நாற்பது அனுபந்தத்தில் கூறும் சத்சங்கச் சிறப்பு.*

*ஒப்பு: காந்தம் இரும்பும்போல் கவர்ந்தெனை விடாமல்*
*கலந்துஎன்னோடு இருப்பாய் அருணாசலா*

*(மணமாலை 14)*

*(iii) எப்போதும் ஒரு உண்மையான காதலி தனது அன்பனின் நினைவிலேயே ஆழ்ந்து இருப்பதுபோல நம் மனோவாக்கு செயல்கள் அனைத்தும் இறைவனைப் பற்றியே இருக்கவேண்டும். சங்கரர் ஸ்லோகத்தில் 'விபு' என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். இதற்கு ஸர்வ வியாபகன் என்பதும் பொருள். பகவானை ஏதோ ஒரு பௌதிக உருவில் ஓர் இடத்தில் மட்டும் இருப்பதாகக் கருதாமல் எங்கும் எல்லாமாய் இருப்பதாக பாவிக்க வேண்டும். அப்போது நாம் தொடக்கத்தில் கண்ட 'பா⁴வ ப³லம்' சித்திக்கிறது.*

*(iv) அடுத்த உவமை: மரத்தைச் சுற்றித் தழுவி அதனைக் கொழுகொம்பாய்ச் சுற்றி வளைத்து வளர்கின்ற கொடியை நாம் சிறிது விலக்கிப் பிரித்தால்கூட, அது படாதபாடு பட்டு சிறிது நேரத்திலேயே மறுபடியும் கொம்பை வளைத்துச் சுற்றிக்கொண்டுவிடும். அதுபோன்றே எத்தனை இடையூறுகள் வந்தாலும் மீண்டும் பகவான் பற்றிய சிந்தனையிலேயே நம் மனத்தை ஈடுபடுத்த வேண்டும்.*

*ஒப்பு: பைங்கொடியாய் நான் பற்றின்றி வாடாமல்*
*பற்றுக்கோடாய்க் கா அருணாசலா*

*(மணமாலை 72)*

*(v) ஐந்தாவது உதாரணம்: நதி கடலில் கலப்பது. கடல்நீர்தான் ஆவியாகி மழையாகி வீழ்ந்து, பிறகு ஆறாகிப் பெருகுகிறது. ஒரு நதியானது எந்த மலையில் பிறந்தாலும், அலுக்காமல் சலிக்காமல் ஓடி வந்து இறுதியில் கடலில் கலந்து தன்னுடைய தனித்துவத்தை இழந்து கடலாகவே ஆகிவிடுகிறது. கடலும் தானே*

*எதிர்வந்து அதை அழைத்துச் சென்று தன்னுடன் ஈர்த்துக் கொள்கிறது. அப்படியே நாமும் பரபக்தி செலுத்தும்போது பகவான் முன்னேவந்து நம்மை ஆட்கொண்டு தனதாக்கிக் கொள்வான்.*

*ஒப்பு:*

*கடலெழும் எழிலியில் பொழிதரு நீர்தான்*
*கடல்நிலை அடைவரை தடைசெய்யின் நில்லாது*
*உடல்உயிர் உனில்எழும்; உனை அடைவரையில்*
*உறுபல வழிகளில் உழலினும் நில்லாது."*

*- (அருணாசல அஷ்டகம் 6)*

*இங்ஙனம் பகவான் தான் உபதேச உந்தியாரில் கூறிய பரபக்தி தத்துவத்தை சிவானந்த லஹரி ஸ்லோக மொழிபெயர்ப்பு மூலமாக எழிலுற விளக்கியுள்ளார்.*

*இவ்வுரையாடலின்போது நமது ஆசிரியர் திவ்யப் பிரபந்தத்தின் முதல் திருவந்தாதி பாடலையும் எடுத்துக் காட்டினார்.*

*பெயரும் கருங்கடலே நோக்கும்ஆறு; ஒண்பூ*
*உயரும் கதிரவனே நோக்கும்; உயிரும்*
*தருமனையே நோக்கும் ஒண்தாமரையாள் கேள்வன்*
*ஒருவனையே நோக்கும் உணர்வு.*

*- (முதல் திருவந்தாதி, பொய்கையாழ்வார், 66)*

*(பொருள்: அலைவீசும் கருங்கடலை நோக்கியே ஆறு பாயும். தாமரை மலர் மேலே உள்ள சூரியனை நோக்கியே மலரும். ஆயுள் முடிவில் பண்படாத உயிர்கள் காலனையே நோக்கிச் செல்லும். பண்பட்ட ஞானிகள் உணர்வு இலக்குமியின் கொழுநன் திருமாலையே எப்போதும் பதிந்திருக்கும்.)*

*"நைந்தழி கனியான் நலனிலை பதத்தில்*
*நாடிஉட் கொள்நலம்"*

*என்று பகவானைப் பிரார்த்தித்து, என்றும் என்னோடு இருந்து பரபக்தி அருள்வாய் என வேண்டுவோம்.*




# திருவண்ணாமலை செய்திகள்

## மஹா பூஜை 30-5-2016

*பகவான் ரமண மகரிஷிகளின் அன்னை அழகம்மையின் மகாபூஜை 30-5-2016 திங்கட்கிழமையன்று ஸ்ரீரமணாச்ரமத்தில் வழக்கம்போல் நடைபெற்றது. பல வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டு சிறப்புப் பூஜைகளுடன் அழகம்மையின் மகாபூஜை மாத்ருபூதேஸ்வரர் ஆலயத்தில் சிறப்பாக நடந்தேறியது. திரளான பக்தர்கள் கலந்து கொண்டு அன்னையின் அருளைப் பெற்றனர்.*

*சென்னை ரமண கேந்திரம், குரோம்பேட்டை ரமணாலயம், இராமநாதபுரம் முருகனார் மந்திரம் மற்றும் மதுரை ரமண கேந்திரம் ஆகிய இடங்களிலும் இவ்விழா கொண்டாடப்பட்டது. குரோம்பேட்டை ரமணாலயத்தில் நாள்முழுவதும் நடைபெற்ற திருவாசக முற்றோதலில் நூற்றியிருபது ரமண அன்பர்களுக்குமேல் முழு நேரமும்*

*அமர்ந்து ஆத்மார்த்தமாக பாராயணத்தில் ஈடுபட்டது சிறப்பம்சம். இவ்விழாவில் சூளைமேடு ரமணன் குழுவினர் முன்னின்று பங்கேற்றனர்.*

## பசு லக்ஷ்மி சமாதி தினம் 17-6-2016

*பசு லக்ஷ்மி சமாதி தினம் ஸ்ரீ ரமணாச்ரமத்தில் 17-6-2016 வெள்ளிக்கிழமையன்று சிறப்பாக நடந்தேறியது. பசு லக்ஷ்மி சமாதி அலங்கரிக்கப்பட்டு சிறப்பு பூஜைகள் மற்றும் பசு லக்ஷ்மியின் மேல் பகவான் இயற்றிய வெண்பா, மணவாசி ராமசாமி ஐயர் இயற்றிய பாடல் மற்றும் பக்தர்கள் இயற்றிய பாடல்களைப் பாடி பக்தர்கள் பசு லக்ஷ்மியை வழிபட்டனர்.*

*இவ்விழா ஸ்ரீ ரமணாச்ரமத்திற்கு பாத்தியப்பட்ட குரோம்பேட்டை ரமணாலயத்திலும் கொண்டாடப்பட்டது. அதிகாலை 6.30 மணிக்கு கோபூஜையுடன் சிறப்புப் பாராயணம் நடைபெற்று பிரசாதம் விநியோகிக்கப்பட்டது. இதேவிழா சென்னை ரமண கேந்திரத்திலும் ராமநாதபுரம் முருகனார் மந்திரத்திலும் கொண்டாடப்பட்டது.*

## ரமண ஆராதனை விழா

66 ஆவது ரமண ஆராதனை விழா,
சென்னை கொளத்தூர், திரு.வி.க.நகர்

*பகவான் ஸ்ரீ ரமணர் ஞானத் திருச்சபை சார்பில் 66வது ரமண ஆராதனை விழா 22-5-2016 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு வேதபாராயணத்துடன் துவங்கியது. தொழிலதிபர் திரு. சிவஞானம் அவர்கள் தலைமை தாங்க, கலாக்ஷேத்திராவில் பயின்று பட்டம் பெற்ற குமாரி S.காயத்ரி ரமண இன்னிசைப் பாடல்களைப் பாடி மகிழ்விக்க அவருக்குப் பக்க வாத்தியமாக திரு. மகேஷ் மிருதங்கம் சிறப்பாக வாசித்தார். குமாரி காயத்ரியின் ரமண இசை மழையில் அனைவரும் மெய்மறந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. விழா முடிவில் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.*

*மாலை 6 மணிமுதல் 7.30 மணிவரை 96/6 பங்காரு தெரு, அயனாவரம் (பஸ்டிப்போ அருகில்) சென்னை-23இல் பிரதிவாரம் ஞாயிற்றுக்கிழமை சத்சங்கம் நடைபெறுகிறது. தொடர்புக்கு: 9884355454.*

## ரமண சத்சங்கம், நங்கைநல்லூர்

*19-6-2016 ஞாயிற்றுக்கிழமையன்று மாலை நங்கைநல்லூரில் அமைந்துள்ள வரசித்தி விநாயகர் ஆலய பிரவசன மண்டபத்தில் 66வது ரமண ஆராதனை விழா அக்ஷரமணமாலை பாராயணத்துடன் துவங்கியது. திருமதி. கலாராணி ரங்கசாமி, (பேராசிரியை, மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்) அவர்கள் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றியதுடன் திரு. தியாகராஜன் அவர்களால் தொகுக்கப்பட்ட 'இயல்பில் இரு' என்னும் நூலை வெளியிட்டார். அனைவரும் திரளாகக் கலந்திருந்து பகவானின் திருவருளைப் பெற்றார்கள்.*

## கோமதி அம்மாள்



*கோமதி அம்மாள், பகவானின் தாயார், அன்னை அழகம்மாளின் சகோதரர் கீழப்பசளை ராமச்சந்திர ஐயரின் பேத்தியாவார்.*

*எருக்கூர் லக்ஷ்மி அம்மாள் அவர்களின் ஒரே மகளாக 1929-இல் பிறந்தார். சிறுவயதிலேயே (1935-இல்) பகவானை தரிசிக்கும் பாக்கியம் பெற்றவர். பல வருடங்களாக திருவண்ணாமலையிலேயே தங்கியிருந்த இவர் 29-6-2016 இல் அருணாசலத்தில் ஐக்கியமானார்.*

*நவராத்திரி மற்றும் ஸ்ரீ வித்யா ஹோமம் போன்ற விழாக்காலங்களில் ஆச்ரமத்தில் சேவைகள் செய்து வந்த இவர் பகவான் அன்பர்களுக்கும் அவ்வப்போது உதவியாய் இருந்துள்ளார்.*

## பகவான் ரமணரின் சேவை மையங்கள்

| | | |
|---|---|---|
| ***மைலாப்பூர்*** திரு R. வேங்கடகிருஷ்ணன், ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் | .......... | 24611397 |
| ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் மேலாளர் கண்ணன் | .......... | 9940418375 |
| ***குரோம்பேட்டை, ரமணாலயம்*** | .......... | 9444261296 |
| ***கிழக்கு தாம்பரம்*** திரு M.A. ராமசாமி | .......... | 9790873138 |
| ***நங்கநல்லூர்*** திரு S. இராமமூர்த்தி | .......... | 22244667 |
| ***மாம்பலம்*** திரு M.K. வைத்தியநாதன் | .......... | 23716495 |
| ***விருகம்பாக்கம்*** திருமதி கௌசல்யா | .......... | 24790635 |
| ***கொளத்தூர்*** கே.ஆர். கோபாலகிருஷ்ணன் | .......... | 9884355454 |
| ***சூளைமேடு*** திரு V. ரமணன் | .......... | 9444172623 |
| ***புதுச்சேரி ரமண கேந்திரம்*** | .......... | 0413-2272141 |
| ***மதுரை*** சோமசுந்தரம் | .......... | 04522348157/2346102 |
| ***இராமநாதபுரம்*** சிரஞ்சீவி | .......... | 9360047936 |
| ***திருச்சுழி*** ஹாலாஸ்ய பட்டர் | .......... | 9442004615 |
| ***மலையாண்டிபட்டினம்*** பாலசுப்பிரமணியம் | .......... | 9965622878 |
| ***பொள்ளாச்சி*** ரமண குமார் | .......... | 9487016880 |
| ***ஒட்டன்சத்திரம்*** வடமலைக்கண்ணன் | .......... | 9842912474 |
| ***பழனி*** என். சோமசுந்தரம் | .......... | 9942327770 |
| ***சேலம்*** குப்புசாமி | .......... | 0427-2295460 |
| ***வந்தவாசி*** டாக்டர் ரவி | .......... | 9787180757 |
| ***மடம்*** சுந்தரமூர்த்தி | .......... | 9942264556 |
| ***திண்டுக்கல்*** பழ. முத்தையா | .......... | 9443070924 |
| ***பூண்டி*** மாரியப்பன் | .......... | 9486576687 |
| ஓசூர் அசோக்குமார் | .......... | 8643842772 |


Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

Printed and Published by: A. Kumar Raja, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.

## கிரஹாம் பாய்ட் (Graham Boyd)



*கிரஹாம் பாய்ட், 13-7-1949 இல் இங்கிலாந்தின் மேற்கு யார்க்சையரில் உள்ள லீட்சு நகரில் பிறந்தார். 1990-களின் மத்தியில் ஆச்ரமத்திற்கு முதலில் வந்த இவர் ஆச்ரம ஆவண காப்பக புகைப்பட நெகடிவ்களை சீரமைக்கும் பணிகளைச் செய்தார். ஒலி மற்றும் எலெக்ட்ரிகல் இன்ஜினியரிங் பணிகளை தன்னார்வத்தினால் கற்றுத் தேர்ந்த இவர், ஆச்ரமத்திற்கு கணினி பயன்பாடுகளை அறிமுகப்படுத்தியதில் காரணமாயிருந்தார். இணையதள வடிவமைப்பு அறிமுகமான ஆரம்ப காலங்களிலேயே ஆச்ரமத்தின் முதல் இரண்டு இணையதளங்களை வடிவமைத்துக் கொடுத்தவர்.*

*இளம் வயதில் கடுமையான பணிகளை மேற்கொண்ட கிரஹாம் பாய்ட் நவீன வாழ்க்கைச் சிக்கல்களின் மத்தியில் மன அமைதிக்கான வழியைத் தேடினார். 1980 களின் ஆரம்பத்தில் ரமண மகரிஷிகளைப் பற்றி மௌனி சாது எழுதிய ‘இன் டேஸ் ஆப் கிரேட் பீஸ்’* (In Days of Great Peace) *எனும் நூலை படிக்க நேர்ந்த அந்தக் கணத்தில் அவர் மனம் சாந்தியுற்றது. அதுமுதல் பகவான் ரமணரின் பக்தர் என்று அவர் தம்மையழைத்துக் கொண்டார்.*

*அயராது சேவை செய்பவரான கிரஹாம் பாய்ட் ஆச்ரமத்திற்கு செய்த பணிகளில் குறிப்பிடத்தக்கது, ஆச்ரம தமிழ்ப் பாராயணத்தை ஒலிப்பதிவு செய்தது, ஆச்ரம ஆங்கில நூல்களை கணினி மயமாக்கியது, பகவான் ரமண மகரிஷிகளின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் ‘எடெர்னல் லைட்’* (Eternal Light) *எனும் ஆவணப்படத்தை எடுத்தது மற்றும் அருணாசல கிரிப்பிரதக்ஷிணம் எனும் வீடியோ படத்தை தொகுத்ததாகும்.*

*இன்றைய ஆச்ரம ஆவணக் காப்பகம் அமைவதற்கு இவரின் பங்களிப்பு முக்கியமானதாகும். உலகெங்கிலுமுள்ள ரமண பக்தர்கள், பகவானின் அரிய புகைப்படங்களை கண்டு, மகிழ்ந்து, பயன்பெறுகின்றனர். அப்புகைப்பட நெகடீவ்களை மறுசீரமைப்பு செய்வதற்கு திரு. கிரஹாம் பாய்ட் முக்கிய காரணமாக இருந்தார். ஏழை எளியவர்களின் நண்பர்; வேண்டுவோர்க்கு சத்தமில்லாமல் உதவிகள் செய்து வந்தார்.*

*2015 நவம்பரில் இவருக்கு எலும்பு புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டு சென்னையில் சிகிச்சை பெற்று வந்தார். இறுதிநாட்களில் திருவண்ணாமலையில் இருக்கும் பாக்கியம் பெற்ற இவர் 16-6-2016 அன்று அருணாசலத்தில் ஐக்கியமானார். லண்டனிலிருந்து வந்திருந்த அவரது மகள் கேண்டீஸ் மற்றும் நண்பர்கள் உடனிருந்து இறுதிச் சடங்குகளை செய்தனர்.*

*ரமணோதயம் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.*

Registered with the Registrar of Newspaper for India  RNI No.:TNTAM/2001/5542

